விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி


Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 24 சனிக்கிழமை (08.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# நந்திக்கடலோரத்தில் மனித எலும்புக்கூடுகள்





(முல்லைத்தீவு)

இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக நம்பப்படும் முல்லைத் தீவு நந்திக் கடலோரத்தில் மனித எலும்புக்கூடுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற இடமான நந்திக் கடற்கரையோரத்திலிருந்தே இவ்வாறு மனித எலும்புக் கூடுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு வெளிப்படத்தொடங்கியுள்ள மனித எலும்புக் கூடுகள் பற்றி இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

கடந்த சில நாட்களாக வெளித்தெரிகின்ற மனித எலும்புக்கூடுகள் மண்டையோட்டைத் துப்பாக்கிச் சன்னம் துளைத்த

19 ஆம் பக்கம் பார்க்க..

## புலிகள் அமைப்பிற்கு தடை நீடிப்பு

(வாசிங்டன்)

அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் அமைப்பின் பெயர் பட்டியலின்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் தடை செய்யப்பட்ட தீவிர வாத அமைப்பு பட்டியலில் சேர்த்துள்ளது.

உலகில் உள்ள 60 தீவிரவாத அமைப்புகளை அமெரிக்கா 2014ம் ஆண்டில் தடை செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 1997 ஒக்டோபர் 8-ம் திகதி முதல் முதலில் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.

அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் புலிகள் அமைப்பு அமெரிகாவில் தடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இலங்கையை விசாரிக்க இது சரியான தருணம்

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க சரியான தருணம் இது என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க...)

## உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்

(கொழும்பு)

மோதல்களின் போது பாலியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருதல் மற்றும் அதனை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச ரீதியில் பிரசாரத்தை மேற்கொள்ளும் ஐ.நாவின் உடன்படிக்கையில் இலங்கை அரசு கையெழுத்திட வேண்டும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் நேற்று வெளி

19 ஆம் பக்கம் பார்க்க..

# ஜெயா, கருணாநிதிக்கு கசையடியுடன் தூக்கிலிட்டுக் கொல்ல வேண்டும்!

## வசைபாடுகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை போஷித்து வளர்த்த தமிழக அரசியல் வாதிகளையே முதலில் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக செயலாளரும் மேல் மாகாண வேட்பாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை - பன்னிப்பிட்டிய வீதியில் அமைந்துள்ள அந்த கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு தமிழீழ நாட்டை உருவாக்கி தருவதாக கூறியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சரான அவர் இந்தியாவின் பிரதமராக வரப்போவதாக பேசி வருகிறார். இந்தியப் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர், இலங்கையை ஆக்கிரமித்தாவது ஈழத்தை உருவாக்க போவதாக பிதற்றி வருகிறார்.

19 ஆம் பக்கம் பார்க்க..

## புத்தாண்டிற்கு முன்பு பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)


2013 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களது பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டிற்கு முன்பு வெளியிடப்படுமென இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஊடக பிரிவின் அதிகாரியொருவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வருடம் இலங்கை

20 ஆம் பக்கம் பார்க்க..

## அமெரிக்க செனட்டின் பிரேரணைக்கு நன்றி தெரிவித்து இலங்கை கடிதம்



(கொழும்பு)

உள்நாட்டு யுத்தத்தை 2009ம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் நாட்டில் ஜனநாயகத்தை மீளளித்தல், புனர்நிர்மாணம் மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றில் இலங்கை அடைந்துள்ள வெற்றியை இனங்கண்டு ஐக்கிய அமெரிக்க செனட் அறிமுகம் செய்த பிரேரணைக்கு (ஜெனிவா பிரேரணை அல்ல) தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

தூதுவர் செனட்டர்களுக்கு அனுப்பிய அக்கடிதத்தில்,

அந்த பிரேரணையானது அமெரிக்க மக்களின் சிரேஷ்ட அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கை பற்றி கொண்டுள்ள நல்லபிப்பிராயத்தையும் புரிந்துணர்வையும் எடுத்துக்காட்டுகிறது.

நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் சமாதானம், ஜனநாயக மீளளிப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான திடமான நடவடிக்கைகள் யாவும் இலங்கையின் உண்மை

20 ஆம் பக்கம் பார்க்க..

## நவநீதம்பிள்ளை ஒரு பொய்யர்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஆக்ரோஷத்துடன் இருக்கும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஒரு பொய்யர் என இலங்கை அரசாங்கம் அவரை கடிந்து கொண்டுள்ளது.

தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில நேற்று பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஐ.நா மனித உரிமை ஆணையாளரை இவ்வாறு சாடியுள்ளார்.

சில நாடுகளிடம் இருந்து வரும் அழுத்தங்கள் ஐ.நா மனித உரிமை தலைமை கொடுக்கும் அழுத்தங்களில் சிக்கி, விடுதலைப் புலிகளு

19 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கைக்கு எதிரான பிரேரணையின் பிரதி இந்தியாவின் கையில்

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணையின் பிரதி நேற்றைய தினம் தமக்கு உத்தியோகபூர்வமாக கிடைத்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறையின் பேச்சாளர் செயத் அகபர்டீன் இதனை தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பிரேரணையை தற்போது இந்திய அதிகாரிகள் ஆராய்வதாகவும் அதன் அனைத்து அம்சங்களும் கணக்கிலெடுக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்றும் அகபர்டீன் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் ஜெனிவாவிலும் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே அங்குள்ள கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும் என்று அகபர்டீன் தெரிவித்துள்ளார்

அமெரிக்காவின் பிரேரணையை தாம் உத்தியோகபூர்வமாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதாக ஏற்கெனவே இந்திய வெளியு

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

13 வயது பாடசாலை மாணவனொருவனை தாக்கிய குற்றச்சாட்டுக்காக பொலிஸ் உத்தியோகத்தர் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் பாடசாலை மாணவன் மீதே பொலிஸ் உத்தியோகத்தரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இத் தாக்குதல் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெற்றுள்ளது. தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கல்வி பயின்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவனை வழிமறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவனின் தந்தை இது தொடர்பாக தாம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடுவோம் என தெரிவித்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும் அவரது சக பொலிஸ் உத்தியோகத்தர்களும் பிரஸ்தாப மாணவன் வீட்டுக்குச் சென்று மாணவனையும் அவரது குடும்பத்தவரையும் மிரட்டியுள்ளதாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளரை பதவி நீக்க வேண்டும் - ஐ.தே.க

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணவை அந்தப் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நீதியான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணையாளர் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என அந்த கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் முன்னர் அரசாங்கத்திற்கு சார்பாகவும் சம்பவம் தொடர்பான விடயத்தை வேறு பக்கம் திசை திருப்பும் நோக்கிலும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய காலத்தில் ஒருவரை கொடூரமான சித்திரவதை செய்தமை தொடர்பில் அஜித் ரோஹன நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்.

இப்படியான நபர் சட்டத்தரணியாகவும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிக்கும வந்தது கேள்விக்குறியானது.

அஜித் ரோஹனவின் செயற்பாடுகள் பொலிஸ் திணைக்களத்தின் நற்பெயருக்கு பெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்ந்த பின்னர் எதிர்காலத்தில பதிலளிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (செ-11)


## அறிவித்தல்

முன்னர் அருளம்பலம் லோகேஸ்வரி என பெயரிடப்பட்ட நான் பின்னர் அருளம்பலம் உமாமதீஸ்வரி என பிறந்த ஆண்டிலேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்றுவரை உமாமதீஸ்வரி என்ற பெயரே வழக்கத்தில் உள்ளதுடன் சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்தி வருகின்றேன். லோகேஸ்வரி என்பவரும் உமாமதீஸ்வரி என்பவரும் நானே என்பதை இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள
உமாமதீஸ்வரி
(சி-6690)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் மேலதிக 03 அச்சுக்களுடனும் 500 அச்சுப் பலகைகளுடனும் விற்பனைக்கு உண்டு. கடைக்குரிய கதவு நிலை 02 உடன் விற்பனைக்குண்டு. 0774366704 (சி-6692)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டில் பன்னையம்பதியில் நி.பர (ஒன்று குளி 04) விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. (சி-6692)

தொடர்புகளுக்கு : 0774366704


# மூதூர் படுகொலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்

## பிரான்ஸ் அரசு கோரிக்கை

(திருகோணமலை)

மூதூரில் 2006 ஆம் ஆண்டு நடந்த பட்டினிக்கு எதிரான நடவடிக்கை என்ற தொண்டு நிறுவனத்தின் 17 பணியாளர்களின் கொடிய கொலை சம்பவம் தொடர்பான தகவல்களை இலங்கை அரசாங்கம் வெளிச்சமிட்டு காட்ட வேண்டும் என பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் நேற்று அறிக்கை ஒன்றை தாக்கல் செய்த பிரான்ஸ் பிரதிநிதி, இலங்கையின் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளில் தண்டனையில் இருந்து விலக்களிப்பதற்கு எதிரான போராட்டம் இன்றியமையாத ஒன்றாகும்.

தண்டனைகளில் இருந்து விலக்களிப்பதற்கு எதிரான போராட்டம் சகல இடங்களிலும் அவசியமானது. இலங்கையின் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு இது அவசியமானது. அதற்கு முன்னுரிமை உள்ளது.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் மூதூரில் இடம்பெற்ற 17 தொழிலாளர்களின் கொடிய கொலை சம்பவம் குறித்த தகவல்களை இலங்கை அரசாங்கம் வெளிச்சமிட்டு காட்ட வேண்டும் என பிரான்ஸ் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

மூதூரில் 2006 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட தமது பணியாளர்களின் கொலை தொடர்பில் பிரான்ஸ் அரச சார்பற்ற நிறுவனம் கடந்த வருடம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

2006 ஒகஸ்ட் 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்த கொலை சம்பவத்துடன் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மன்னார் புதைகுழி

# அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்

(மன்னார்)

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் காணப்பட்ட மனித புதைகுழியை தோண்டும பணிகள் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த புதைகுழியில் இருந்து இதுவரையில 80 மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பான பரிசோதனைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் மனித புதைகுழி தொடர்பில் இலங்கை பூகோள மற்றும் சுரங்கப் பணிகள் திணைக்களத்தின் அறிக்கை வெளிவரும வரையிலேயே இதனை தோண்டும் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் மீணடும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# வீதிப் புனரமைப்பால் தொல்லை முல்லைத்தீவில் நேற்று ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

வடக்கே மேற்கொள்ளப்படுகின்ற சில அபிவிருத்திப் பணிகளால் பொதுமக்களுடைய தேவைகள் நிறைவேறுவதற்கு பதிலாக வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்து முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்துள்ளது.

யுத்த மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் வீதிப் புனரமைப்பு உட்பட பல உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பகுதியில் முப்பது வருடங்களாகப் புனரமைக்கப்படாத ஒரு முக்கிய வீதி புனரமைக்கப்பட்டு புதிதான நிர்மாணம் செய்யப்பட்டுள்ள போதிலும், மல்லாவி நகர வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறி நேற்று வெள்ளிகிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது.

மல்லாவி கடைவீதி ஊடான பிரதான வீதி நான்கு அடி உயரம் உயர்த்தப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டிருப்பதனால், கடைகளுக்கு மக்கள் செல்ல முடியாதுள்ளது. கடை வீதிக்கு வருபவர்கள் தங்களுடைய சைக்கிள் ள் உட்பட வாகனங்களை நிறுத்தவும் முடியாது. அதற்கான இடம் கிடையாது. உயர்த்தப்பட்டுள்ள வீதியில் இருந்து கடைகள பள்ளததில் இருப்பதனால், கடைகள் ஓரத்தில புதிய சிறிய வீதி அமைக்கப்படுகின்றது. இதில கடைகளுக்குத் தேவையான பொருட்களை வாகனங்களில் கொண்டு சென்று இறக்கவும் முடியாதுள்ளது என மல்லாவி வர்த்தகர் சங்கத் தலைவர் வேலாயுதபிள்ளை பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்த வீதியின் உயரத்தைக் குறைத்து முன்பு இருந்த வீதியின் மட்டத்தில் இருந்து ஒரு அடி உயரத்தில் இருவழிப்பாதை அமைத்துத் தரவேண்டும் என்பதே எமது கோரிக்கை என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த வர்த்தகராகிய ஜெகதீஸ்வரன் விஜயலக்சுமி கூறினார்.

இது எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று வர்த்தகர்கள் தெரிவித்திருந்த ஆலோசனைகள் அதிகாரிகளினால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தினாலேயே இப்போது பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று வர்த்தகர்கள் பலரும் தெரிவித்தனர்.

இந்த வீதிப் பிரச்சினை குறித்து பதிலளித்த முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், இந்த வீதி அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலேயே இதுபற்றி தனது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனினும் பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் ஏற்பட்டுள்ள வசதியீனங்கள் குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதற குரிய மாற்று ஒழுங்குகளுக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார். (செ-11)

## மரண அறிவித்தல்



# சின்னத்துரை திலகராஜா

(ஓய்வுபெற்ற மதுவரி உதவி ஆணையாளர்)

சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை பலாலி வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திலகராஜா அவர்கள் நேற்று (07/03/2014) காலமானார்.

அன்னார் ஜெயதேவியின் அன்புக் கணவரும், தர்ஷினியின் (SDC நிறுவனம்) பாசமிகு தந்தையும், மகேந்திரனின் (முன்னாள் முகாமையாளர்- Save the Children in Sri Lanka) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (09/03/2014) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம் கட்டை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்
தர்ஷினி மகேந்திரன் (மகள்)
(இ)


தற்போது புதிய இடத்தில் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தற்போது
எமது கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது இல. 30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட. 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு
1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்

- லண்டன் - 650/=
- பிராண்ஸ் - 750/=
- கனடா - 900/=
- டென்மார்க் - 800/=
- அவுஸ்திரேலியா - 750/=
- சுவிஸ்- 850/=
- நெதர்லான்ட் - 850/=
- நோர்வே - 900/=
- இத்தாலி - 875/=
- ஜேர்மனி - 700/=

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642





## திருமுருகன் கொம் நெற்

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை. 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
இல. 30,கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN EXPRESS இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அதிசய விளக்கு

இப்போது உங்களுக்கெல்லாம் ஒரு விடுகதை போடப் போகிறேன். என்னவென்றால், ஒரு விளக்கு எரியும். ஆனால் அதைத் தொட்டால் சுடாது. எரிகிற விளக்குத்தான். ஆனால் அதில் உஷ்ணம் இருக்காது. அது என்ன விளக்கு?... உங்களுக்கு நினைவு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். பல பேர் யூகம் செய்திருப்பீர்கள். யூகம் செய்ததைப் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அது மின்மினிப்பூச்சி!

மின்மினிப்பூச்சியிலே வெளிச்சம் இருக்கும். ஆனால் தொட்டால் சுடாது. அதில் ஒளி இருக்கும். ஆனால் நம் கையை பதம் பார்க்காது. அந்த மின்மினிப் பூச்சியை நாம் காடுகளுக்குப் போகும் போது பார்த்திருப்போம். அது இரவு நேரத்தில் நட்சத்திரம் மாதிரி மின்னிக்கொண்டு பறந்து போகும். மின்மினிப் பூச்சிக்கு இந்த வெளிச்சம் எங்கிருந்துவருகிறது என்று ஆராய்ச்சி செய்தார்கள். ஒருவித வாயு அதன் உடம்பில் இருக்கிறது. அந்த வாயு காற்றோடு சேரும்போது அந்த மாதிரி வெளிச்சம் வருகிறது என்று கண்டறிந்தார்கள்.

அந்த வெளிச்சத்தை ஏன் மின்மினிப்பூச்சி பரப்புகிறது என்று இன்னொரு ஆராய்ச்சி செய்தார்கள். அந்த வெளிச்சத்தைப் பரப்புவது ஆண் மின்மினிப்பூச்சி. பெண் மின்மினிப்பூச்சிக்குத்தான் இருக்கிற இடத்தைக் காட்டுவதற்காக அப்படி ஓர் ஒளியை அது கொடுக்கிறது என்று ஒரு கருத்து இருக்கிறது.

வியட்நாமில் இருக்கிற மின்மினிப்பூச்சிகளிடம் ஒரு வினோதமான பழக்கம் இருக்கிறது. அந்நாட்டில் மின்மினிப்பூச்சிகள் ஒன்று, இரண்டு என தனித்தனியாக இருப்பது இல்லை. ஆயிரக்கணக்கான மின்மினிப்பூச்சிகள் கூட்டமாக ஒரே நேரத்தில் மரங்களிலே வந்து உட்காரும். அப்போது, அந்தமரங்களைப் பார்ப்பதற்கு ஒரே ஒளிவெள்ளமாக இருக்கும். திடீரென்று விளக்கை அணைப்பது போல அவையெல்லாம் ஒரே நேரத்தில் தன் ஒளி வெள்ளத்தை–வெளிச்சத்தை நிறுத்தி விடும். சிறிதுநேரம் சென்றபின் மீண்டும் வெளிச்சம் வரும். பிறகு திடீரென்று வெளிச்சம் நின்று விடும் இப்படி ஆயிரக்கணக்கான மின்மினிப்பூச்சிகள் நிறுத்தி நிறுத்தி வெளிச்சம் காட்டுவது காண்பவர்களுக்கு கண்கொள்ளா காட்சியாக இருக்குமில்லையா?

கல்யாண வீடுகளைப் பார்த்தால், மரங்களிலே மின் குமிழ்களை தொங்கவிட்டிருப்பார்கள். அவை அணைந்து அணைந்து எரியும். அது ஓர் அழகு இல்லையா! ஆனால் அந்த மின்குமிழ்கள் எரிவதற்கு மின்சாரம் வேண்டும். இந்த மின்சாரப் பூச்சிகளோ இயற்கையிலேயே இப்படி ஒரு சக்தியைப் பெற்று வினோதம் செய்வது ஆச்சரியமில்லையா? அதனாலே இந்த ஆச்சரியத்தைப் பார்ப்பதற்காகவே நிறைய கூட்டம் வியட்நாமிலே கூடிவிடும்.

இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், மின்மினிப்பூச்சிகள் மொத்தமாக வரிசையாக பறந்து போனால், ரயில் வண்டித்தொடர் போவது போல் இருக்கும்.

எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்கு சில பிராணிகளுக்கு சில வாய்ப்புகளை இயற்கை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

ஒரு வகையான பல்லி இருக்கிறது. அந்தப் பல்லி, தன்னைப் பிடித்து விழுங்க வரும் பிராணியைப் பார்த்த உடனே என்ன செய்யும், சட்டென்று தன்னுடைய வாலை கழற்றி விட்டு விடும். அப்படி கழற்றி விடப்பட்ட வால் துடித்துக் கொண்டே கிடக்கும். ஏறக்குறைய ஒரு மணி நேரம் வரை அந்த வால் அப்படித் துடித்துக்கொண்டே இருக்கும். பல்லியைத் துரத்தி வந்த பிராணி, இதுதான் உண்மையான பல்லி என்று நினைத்து, அதோடு போராடிக்கொண்டிருக்கும். அதுக்குள்ளே உண்மையான பல்லி தப்பித்து ஓடிப் போய் பத்திரமான இடத்தில் இருந்து கொள்ளும்.

இந்தப் பல்லி இனத்திற்கு என்ன வசதி என்றால் அதன் வால் சிறிது நாளிலே திரும்ப முளைத்து விடும். மறுபடியும் ஆபத்து வரும் போது திரும்ப அந்த வாலை கழற்றி விட்டு தப்பித்து விடும். இது போல விசேட உடலமைப்பு பல்லிக்கு இருப்பதால் எதிரிகளிடமிருந்து தப்பிக்கிறது. ஆக பல்லி போன்ற ஐந்தறிவு பிராணிகளே இந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்கிறது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் எச்சரிக்கையாக இருக்கிறோமா என்பது யோசிக்க வேண்டிய விடயம் தான்.

ஒருத்தருக்கு காலிலே ஆணி குத்திவிட்டது. உள்ளூர் வைத்தியரிடம் போனார். வைத்தியர் அந்த ஆணியை எடுக்க முயற்சி செய்தார். ஆனால் ஆணி வருவதுபோல் தெரியவில்லை. சரி பரவாயில்லை. சற்று பழுத்து விட்டதென்றால் மறுநாள் எடுத்து விடலாம் என்று அவராகவே நினைத்துக்கொண்டு ஒரு மருந்தைக் கட்டி விட்டார்.

மறுநாள் ஆணி குத்தியவர் வைத்தியரிடம் போனார். வைத்தியர் திரும்பவும் முயற்சி செய்தார். இப்போதும் அவரால் ஆணியை எடுக்க முடியவில்லை. இப்படியே பத்துநாள் ஆயிற்று. பத்தாவது நாளும் வழக்கம் போல நோயாளி வந்தவுடனே வைத்தியர் கட்டை அவிழ்த்து அந்தப் புண்ணை முன்போல நோண்டிக் கொண்டே இருந்தார். நோயாளிக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. அவர் வைத்தியரிடம் தினமும் நான் வரும்போதெல்லாம் திரும்ப திரும்ப அந்தப் புண்ணை நோண்டுகிறீர்களே, சும்மா மருந்து மட்டும் போட்டு கட்டிவிடக்கூடாதா? என்று கேட்டார்.

"ஆணி இன்னும் வெளியே வரவில்லை. அதைத்தான் தேடிக் கொண்டு இருக்கிறேன்" என்றார் வைத்தியர். "முதல் நாள் நீங்கள் நோண்டும் போதே ஆணி வெளியே வந்து விழுந்து விட்டது. அது தேவைப்படும் என்று நான் தான் எடுத்து பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்றார் நோயாளி.

*இளசை சுந்தரம்*

# புற்றுநோய் வைத்திய விடுதிகள் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு இடமாற்றம்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கி கொண்டிருக்கும் புற்றுநோய் வைத்திய விடுதிகள் எதிர்வரும் காலங்களில் முற்றாக தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றுவதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக யாழ்.போதனாவைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கி கொண்டிருக்கும் புற்றுநோய்வைத் திய ஆண்கள் விடுதி (விடுதி இல.26A) எதிர்வரும் 14, 15, 16, ஆம் திகதிகளில் தெல்லிப்பழை ட்ரெயில் புற்று நோய் வைத்தியசாலைக்கு இடமாற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இம் மூன்று தினங்களும் இவ் விடுதியில் நடைபெறும். அனைத்து சேவைகளும் தற்காலிகமாக இடை நிறுத் தப்பட்டு மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் அனைத்து சேவைகளும் தெல்லிப்பழை ட்ரெயில் புற்று நோய் வைத்தியசாலையில் வழமை போல் செயற்படும் என தெரிவித்துள்ளார். அத்துடன் மறு அறிவித்தல் வரை புற்று நோய் வைத்திய பெண்கள் விடுதி (விடுதி இல.26 B) மற்றும் கிளினிக் தொடர்ந்தும் யாழ்.போதனா வைத்தியசா லையிலேயே இயங்கும் என அறிவித்துள்ளார். (2)

# நீதி, நிர்வாகம் இரண்டும் நாணயத்தின் இருபக்கங்கள்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

நீதி, நிர்வாகம் ஆகிய இரண்டும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவையென யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவை பலப்படுத்தல் தொடர்பான கூட்டம் நீராவியடி இலங்கை வேந்தன் கலாமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாம் கலை, பண்பாடு,பாரம்பரியங்கள், கலாசார விழுமியங்களைக் கொண்ட சமூகத்துடன் இணைந்து வாழ்கின்றோம். இந்த அடையாளங்களை சரியான முறையில் வலுவூட்டவும் தவறுகள் இடம்பெறாது பாதுகாக்கவும் சிவில் பாதுகாப்புக்குழுவினர் தங்களது கடமையைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

மதம், மொழி, சுதந்திரம் இவற்றை எமது மக்கள் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். சரியானவற்றை சரியான முறையில் செய்ய வேண்டும். இவற்றுக்காக அனைவரும் ஒன்றிணைந்து நல்லதொரு வழிகாட்டலை வழங்க வேண்டுமெனவும் அவர் கூறினார். (2-4)

# பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் செயற்கை அவயவங்கள் மற்றும் சார்புறுப்புக்களைத் தயாரிப்பதற்குரிய 3 வருட காலப் பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை S.L.S.P.O நிறுவனம் கோரியுள்ளது.

இதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை www.slspo.com என்ற இணையத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவிருப்பதனால் தகைமை பெற்ற யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன பயனாளிகள் மேற்படி பயிற்சி நெறிக்கு தவறாது விண்ணப்பிக்குமாறு தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 |
| தக்காளி | 20 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 60 | 50 |
| கரட் | 90 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 25-90 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 55-70 | 60 | 70 |
| பாகற்காய் | 90 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 100 | 130 | 80 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 120 | 400 |
| போஞ்சி | 60 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 10 | 40 | – |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 20 |
| தேசிக்காய் | 50-80 | 80 | 40 |
| தேங்காய் (ஜோடி) | [illegible] | 50 | 50 |
| இராசவள்ளி | [illegible] | 80 | 100 |

# இராசி பலன்

08.03.2014
(மாசி 24, சனிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சப்தமி முற்பகல் 10.06 மணிவரை
ரோகினி முன்னிரவு 9.21 மணிவரை
இராகுகாலம் 9.24-10.54 மணிவரை
சுபநேரம் 3.24-4.54 மணிவரை

**மேடம்** வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**இடபம்** பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மிதுனம்** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உணர்ச்சிவசப்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ் நிலை உருவாகலாம்.

**கடகம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும், தொலை பேசித் தகவல் மகிழ்ச்சி தரும், பெருமைப்படவேண்டிய நாள்.

**சிங்கம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் வெற்றி கிடைக்கும், செலவுகள் அதிகமாகும், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.

**தனுசு** உடல் நலம் சீராகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யமான நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**மகரம்** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வீகச் சொத்துகளால் ஆதாயமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, மனதில் தோன்றுவதை செய்வீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** பிதா சிந்தையுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உடன்பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த(உ/த) மாணவர்களை சித்திபெற வைக்கும் நடைமுறை


(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலிருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்களை ஆகக் குறைந்தது எஸ் தரத்தில் சித்தி பெற வைக்கும் செயற்றிட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.




இதன்படி வலிகாமம் கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் கல்வி கற்பிக்கும் துறைசார் ஆசிரியர்கள் இச் செயற்றிட்டத்தில் இணைக்கப்படவுள்ளதுடன் கோட்ட மட்டத்திலுள்ள பாடசாலைகளிடையே இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

குறித்த செயற்றிட்டம் தொடர்பாக ஆராய்வதற்கென வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள அதிபர்களுடன் முக்கிய கலந்துரையாடலொன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-23)




# நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இடமளியோம்

## வ.மா.சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டுமொரு பயங்கரவாதம் தோன்றுவதற்கு நாம் இடமளியோம் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.





யாழ்ப்பாணம் சிவில் பாதுகாப்புக்குழு அங்குரார்ப்பண நிகழ்வு நீராவியடியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நேற்றுக்காலை 8.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் சிவில் பாதுகாப்புக் குழுக்களினை அமைப்பதற்கான பிரதான காரணம் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான பிரதான காரணமாகும்.

நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்து 614 சிவில் பாதுகாப்பு குழுக்கள் இயங்கி வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் 41 பொலிஸ் நிலையங்கள் உள்ளதோடு 7 பொலிஸ் பிரிவுகளும் உள்ளன.

891 சிவில் பாதுகாப்பு குழுக்கள் வடக்கு மாகாணத்தில் இயங்கி வருவதோடு அக்குழுக்களில் 22 ஆயிரத்து 275 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாகவும் உள்ளனர்.

நாடு முழுவதும் இயங்கி வருகின்ற சிவில் பாதுகாப்பு குழுக்கள் ஒவ்வொன்றிலும் 25 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இவ்வாறான சிவில் பாதுகாப்பு குழுக்களின் மூலம் உங்களது வதிவிடத்தை, பிரதேசத்தை, அலுவலககங்களினை நீங்களே பாதுகாத்து கொள்வதனால் உறுதியான ஒரு பாதுகாப்பினை பெற முடியும்.

பொலிஸாரும் பொதுமக்களும் இந்த விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்படுவதால் இருவரிடையே நம்பிக்கையும் புரிந்துணர்வும் ஏற்படுகின்றது.

இதனால் நமக்கிடையே உள்ள இன, மத வேற்றுமைகள் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டு நாம் அனைவரும் ஒன்று என்ற மனப்பாங்கு ஏற்படுகின்றது.

இங்கு மீண்டுமொரு பேரழிவு, பயங்கரவாதம் ஏற்படுவதனை நாம் அனைவரும் விரும்பவில்லை.

சிவில் பாதுகாப்பு குழுக்களின் பிரதான நோக்கம் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகும். யாழ்ப்பாணத்தில் கொலைகள், கொள்ளைகள் அதிகரித்து வருகின்றதோடு போதைப்பாவனை பழக்கமும் அதிகரித்து காணப் படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் குற்றங்கள் யாழ்ப்பாணத்தவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் களவெடுப்பதற்காக வெளிநாடுகளிலிருந்தோ அல்லது வெளி மாவட்டங்களிலிருந்தோ யாரும் வரப் போவதில்லை. இங்குள்ளவர்களே இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இங்கு நடைபெறுகின்ற குற்றச் சம்பவங்களினை இங்கு இயங்குகின்ற சிவில் பாதுகாப்பு குழுக்களினால் கட்டுப்படுத்த முடியும்.

இங்கு நடைபெறுகின்ற ஊழல் சம்பவங்களினையும் சிவில் பாதுகாப்பு குழுக்கள் கண்டறிந்து உரியர்களிடம் இவற்றினை கூறி தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

இக்குழுக்களில் இருப்பவர்கள் தமது அங்கத்துவத்தை தவறாக பிரயோகித்து விடக்கூடாது என்ற நோக்கத்தில்தான் அடையாள அட்டைகள் வழங்கப்படாத வண்ணமுள்ளன.

எனினும் இக்குழுவில் இருந்து அவரது நடத்தைகள் மேற்பார்வை செய்யப்பட்டு சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் உறுதிப்படுத்தலுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் தற்போது அதிகம் கரிசனை கொள்ள வேண்டிய விடயம் வீதி விபத்து தொடர்பாகும்.

நாளுக்கு நாள் யாழில் வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இதற்கு மது போதையில் வாகனம் செலுத்துவதே காரணமாகும்.

இது விடயத்தில் அனைவரும் கவனமாகச் செயற்படல் வேண்டும் என்றார் அவர். மேலும் இச் சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் மதகுருமார்கள், பொலிஸ், கிராம சேவையாளர்கள் உட்பட இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர். (2-4)

# பாரம்பரிய கலைகளுக்கான போட்டி விண்ணப்ப முடிவுத்திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கலை மனறங்களுக்கிடையே நடத்தப்பட்வுள்ள பாரம்பரிய கலைகளுக்கான போட்டியும் விருது வழங்கலுக்குமான கால அவகாசம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கூத்து, இசைநாடகம், கூத்து வழி நடனம் போன்ற போட்டிகளை வடமாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத இயங்கு நிலையிலுள்ள கலை இலக்கிய மன்றங்களிடையே நடத்துவதற்கு அண்மையில் விண்ணப்பம் கோரப்பட்டது.

இந்நிலையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி கடந்த 5 ஆம் திகதி என அதில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும்விண்ணப்பிக்கும்திகதி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்போட்டி தொடர்பான விதி முறைகளையும் விண்ணப்பப் படிவங்களையும் ஆளுநர் செயலகம், இல.48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 0729679872 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

# அபிவிருத்திக்குழு அமைப்பதற்கான பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட 1 ஆம் வட்டாரத்திற்கான அபிவிருத்திக்குழு அமைப்பதற்கான பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மீசாலை மேற்கு மலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதாக நகரசபை உறுப்பினர் அ.பாலமயூரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாயசம்மேளனம், மாதர்சங்கம், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், ஆலய திருப்பணிச் சபைகள் மற்றும் விவசாய உற்பத்திக்கு கைத்தொழில் தொடர்புடைய அமைப்புகள் ஆகியவை கலந்து கொள்ளவுள்ளன.

இதன்போது குறித்த வட்டாரத்திலுள்ள கிராமங்களின் தேவைகள், குறைபாடுகள் என்பன இனங்காணப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி அனைத்து பிரதேசங்களுக்கும் பரவலாக கிடைக்கும் வகையில் முன்மொழிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்தகால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களின் காரணமாக பொருளாதார நிலையில் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்தல், பயனாளிகளைத் தெரிவு செய்தல், பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் விசேட உதவி தேவைப்படும், மாற்றாற்றல் உடையோர் தொடர்பில் திட்டங்களை வரைவதற்கான கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன. (2-9-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பது மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## ஆய்வுத் தகவல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இம் மாவட்டங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது தெரிய வந்துள்ளதாகவும் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை, குருநாகல், புத்தளம், கண்டி, கேகாலை இரத்தினபுரி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலேயே டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் தென் கிழக்கு பருவப் பெயர்ச்சி மழைக் காலம் ஆரம்பிக்கும் நிலையில் இம் மாவட்டங்களில் இந்நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிரு ப்பதால் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டிருப்பதாகவும் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹசித் திசேரா குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு டெங்கு நோயினால் 32 ஆயிரத்து 60 பேர் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த அவர் கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 4 ஆயிரத்து 138 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (2)

# அஜித் ரோஹனவை பதவி நீக்க வேண்டும்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹனவை உடனடியாக பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நீதியான தேர்தல் ஒன்றை நடத்தவென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இந்நடவடிக்கையை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை ஒன்றை விடுத்துளளது.

அண்மைக் காலங்களில் பதிவான சில சம்பவங்களில் அஜித் ரோஹன பொலிஸ் ஊடகப் பேச்சாளர் என்ற பதவியில் வரம்பு மீறி செயற்பட்டுள்ளதாக அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில சம்பவங்கள் குறித்து விசாரணை நடைபெறுவதற்கு முன்பே அஜித் ரோஹன அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் சம்பவத்தை திசை திருப்பும் வகையிலும் ஊடகங்களில் பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

வலஸ்முல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக செயற்பட்ட காலத்தில் நபரொருவரை கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அஜித் ரோஹன நீதிமன்றினால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

இவ்வாறான ஒருவர் பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை கேள்வியை ஏற்படுத்துவதாகவும் இதனால் பொலிஸ் திணைக்களத்தின் கீர்த்திக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (2)

# முஸ்லிம் சமூகம் நசுக்கப்பட்டு நாட்டில் இனவாதம் தூண்டப்பட்டுள்ளது

(கொழும்பு)

இந்த அரசின் ஆட்சியின் கீழ் நாட்டில் இன்று முஸ்லிம் சமூகம் நசுக்கப்பட்டு இனவாதம் தூண்டப்பட்டு மிகவும் மோசமானதொரு நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையிலிருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க இந்த வங்குரோத்து அரசாங்கத்தினால் ஒருபோதும் முடியாதுள்ளது.

எனவே. நாம் ஒற்றுமையாக ஐக்கிய தேசிய கட்சியின் கீழ் ஓரணியில் திரண்டு இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டிய காலம் கனிந்துள்ளதாக மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் மத்திய கொழும்பு ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில,

கொழும்பு மக்களை அரசாங்கம் பல வகையிலும் சோதித்து வருகின்றது. ஆரம்பத்தில் எமது மக்களின் வியாபாரத்தில் கை வைத்தார்கள். தற்போது எமது வீடுகளை இடித்து தரை மட்டமாக்குகின்றனர். அப்பாவி மக்களை வெளியேற்றிவிட்டு அந்த இடங்களை சூதாட்ட விடுதிகள் அமைப்பதற்கும் விபசார விடுதிகள் நடத்துவதற்கும் போதைபொருள் மத்திய நிலையமாக்குவதற்கும் வெளிநாடுகளுக்கு விற்க அரசு திட்டமிட்டு கொண்டிருக்கிறது. இவ்வாறு எமது மக்களை நசுக்கி அரசு சுகம் அனுபவிக்கின்றது.

இவர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தருணத்தில் இருக்கின்றோம். இதற்கான சந்தர்ப்பம் தற்போது கிட்டியுள்ளது. அரசை வீழ்த்துவதற்கு இந்த மாகாண சபையை பயன்படுத்த வேண்டும்.

முஸ்லிம்களுக்கு அரசு அநியாயம் செய்வதாக கூறிக்கொண்டு இன்று சிலர் கொழும்பில் வாக்கு கேட்டு வந்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் மஹிந்த அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் தேர்தல் மேடைகளில் மட்டுமே முஸ்லிம் சமூகம் என்று பேசித் திரிகின்றனர்.

ஆனால், இன்று வரை பாராளுமன்றத்திலோ அமைச்சரவை கூட்டத்திலோ பள்ளிவாசல்கள் தாக்குதல் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை.இவர்கள் கொழும்பு முஸ்லிம்களின் வக்குகளை சின்னா பின்னமாக்கி பிரதிநிதித் துவத்தை குறைத்து விட்டு மக்களை பாதாள படுகுழியில் தள்ளிவிட முயற்சிக்கின்றனர்.

இவர்கள் சமூகத்தின் பெயரை வைத்துக் கொண்டு அரசியல் பிழைப்பை நடத்தி சுகபோகங்களை மாத்திரம் அனுபவிக்கின்றனர். இவர்களையும் சர்வாதிகார அரசாங்கத்தையும் விரட்டியடிக்க முஸ்லிம்கள் ஐக்கிய தேசிய கட்சி எனும் ஓரணியில் திரள வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகும் என்றார்.(2)

**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 53 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம்**

விஜய வருடம் 9.03.2014 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை *மருத்துவ கிளினிக் சாய்சாலை* பகுதியில் தலைவர் திரு. செ.பேரின்பநாதன் தலைமையில் 53 ஆவது கூட்டம் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**சி.பாக்கியலிங்கம்,**
**செயலாளர்.**

(5774)




**சேவை நாயகனை வாழ்த்துகின்றோம்**

**திரு. அம்பலம் ரவீந்திரதாசன் (JP)**

நல்லூர் ஈ.பி.டி.பியின் அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவ ரும் மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் கூற்றுக்கு மண்ணுலகில் அவதரித்தாய். எதையும் எதிர்பாராமல் சேவைகள் செய்திடவே பாரினில் தோன்றினாய், சோதனைகள் எதிர் கொண்ட போதி லும் முகம் கோணாமல் துணிந்து நின்றாய், மக்கள் பலம் உன்னருகே ஒன்று சேர யுகத்தி னில் நிலையான இடம் கொண்டாய் நாடி வரும் மக்களை இன்ப முகத்தோடு எதிர் கொண்டு அவர்களின் இன்னலை நீ பெற்று அகம் குளிர அன்பான வார்த்தைகள் பெற்றிடு வாய் தேவைகள் எதிர் பார்க்கும் காலத்திலும் தனக்கென எதையும் நோக்காது தேவையே முதற் கடமையென செய்திடுவாய். 51 வருடங்கள் பூமியில் தோன்றி எண்ணற்ற பல சேவைகளை இரவு பகலாக மேற்கொண்டு வந்தாய். இன்னும் பல தேவைகளை இப்பாரினில் செய்திட பல்லாண்டு காலங்கள் உமது குடும்பங்களோடு வாழ வாழ்த்தும் நன்றி மறவாத நெஞ்சங்கள்.

வாழ்க வளமுடன், வாழ்க உம் சேவை

வாழ்த்துவோர்: T.N. ஆட்டோ தரிப்பிட உரிமையாளர்கள்,
(பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி)

(5777)



**கல்யாண மாலை**


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 27 செவ் 2 இல்<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/1121 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 72 செவ் 1 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்: BA / அரச பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: G/1621 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:O/L /கம்பனி வேலை<br>தொ.இ: B/1122 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 52 செவ் 7 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L, GAQ<br>தொ.இ: G/1625 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 31.25 உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: College / சொந்த வியாபாரம் (கனடா PR)<br>தொ.இ: B/1125 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 24.5 செவ் 8 இல்<br>உயரம்: 145 cm<br>தகைமை/தொழில்: கலைப்பீட மாணவி<br>தொ.இ: G/1634 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 16 உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BSc, PHED – Following / அவுஸ்திரேலியா (Student Visa)<br>தொ.இ: B/1126 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 12 உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1638 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையன்கட்டு குளத்திற்கு அருகாமையில் கருங்கல் அகழ்வு

## வ.மா.உறுப்பினர் ரவிகரனிடம் மக்கள் எடுத்துரைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு குளத்தின் அருகாமையில் கருங்கல் அகழ்வு இடம்பெறுகின்றமை தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியதை அடுத்து அங்கு சென்ற உறுப்பினர் நிலைமைகளை நேரடியாக அவதானித்துள்ளார்.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்,

தட்டையமலை, பூந்தோட்டம், முருகனூர், பெரிய சாளம்பன் உட்பட முத்தையன்கட்டு குளத்தின் பங்காளிகள் என சுமார் 2ஆயிரத்து 100 பேர் உள்ளனர். அத்துடன் இக்குளத்தினால் 6ஆயிரத்து112 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகின்றது. வாய்க்கால் பாதிப்புகள் சீர்செய்யப்படும் பட்சத்தில் மேலும் 2ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும். இந்நிலையில் இக்குளத்தின் கட்டுமான பணிகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு வடமாகாண சபையின விவசாய அமைச்சு முன்வந்துள்ளதை அம்மக்கள் பாராட்டினார்கள்.

இக்குளத்தின் சிறப்பம்சமாக இயற்கையாக அமையப்பெற்ற அணை காணப்படுகிறது. முத்தையன் கட்டு குளத்துக்கு கல்லுமலையானது (துட்டைய மலை) அணையாக அமையப்பெற்றுள்ளதால் குளத்தின் கலிங்கும் கல்லுமலையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அந்த மலை அணை போல நீளத்திற்கு இருபக்கமும் இருப்பதால் இக்குளத்துக்கு வால் கட்டும் கட்டப்படவில்லை. ஆனால் தற்பொழுது இக்குளத்தின் அணைககட்டுத்தொடரின் அருகாமையில் கருங்கல் அகழ்வுகள் நடைபெறுகின்றன.

பியல்குரேக்கு அனுமதி வழங்கி குறித்த மலை உடைக்கப்பட்டு கருங்கல் அகழ்வு நடப்பதால் தமது வளங்கள் சூறையாடப்படுவதாகவும் மாரி காலத்தில் நீர் மட்டம் உயரும் பட்சத்தில், மக்கள் குடியிருப்புகளுக்குள் நீர்உட்புகும் நிலை ஏற்பட்டால் பல ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வாதாரங்கள் எதிர் காலத்தில் முடங் கக்கூடிய அபாயம் உள்ளதாகவும் குளத்தின் செயற்பாடுகள் முடங்கும் நிலை ஏற்படலாம் எனவும் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்

இந்நிலையில் குளக்கட்டு அணை அகழ்வு நடைபெறும் இடங்களை நான் பார்வையிட்டதோடு கருங்கல் அகழ்வு செய்பவர்களுடன் கலந்துரையாடி. அனுமதிப்பத்திரத்தை தாண்டி அகழ்வு நடைபெற்றாலோ அல்லது அனுமதிப்பத்திரம் தவறாக வழங்கப்பட்டிருந்தாலோ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்டியதோடு இது தொடர்பில் கவனம் செலுத்துவேன் என்பதையும் மக்களுக்கு கூறியுள்ளேன் என்றார். (2-9-250)

# வடமாகாணம் மீன்பிடித்துறையில் பொருளாதார மையமாக அமைந்துள்ளது

## அமை.ராஜித சேனாரத்ன பெருமிதம்



**வடமாகாண முதலமைச்சர் தென்பகுதியில் வாழ்ந்தமையால் பெரும்பான்மையின மக்களின் எண்ணங்களை நன்கு அறிந்திருக்க கூடியவர் என்பதனால் இவர் மூலம் தீர்வினை பெறமுடியும் என தான் எண்ணுவதாக கடற்றொழில் மீன்பிடி வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் நன்னீர மீன்பிடிப்பாளர்களுக்கு வள்ளங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று உங்களுக்கு முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரன் எனது நீண்ட கால நண்பர். ஆகவே அவர் மூலமாக எதிர்காலத்தல் இந்த பிரதேசத்தின் பல பிரச்சினைகள் தீர்கப்படலாம் என்ற எண்ணம் எனக்குள்ளது.

அத்துடன் அவர் தென் பகுதியில் வாழ்ந்தமையால் சிங்கள மக்களின் எண்ணங்களை நன்கு அறிந்திருக்க கூடியவர் என்பதால் அவருக்கு சிங்கள மக்களுடன் இணைந்து இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்க்க கூடிய வல்லமையுண்டு. ஆகவே எதிர் காலத்தில் அது சாத்தியமாகும் என எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் இந்த நாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக வட பிரதேசம் அடக்கப்பட்டிருந்தமையினால் எனது அமைச்சின் ஊடாக கூடுதலான நிதியை இப் பிரதேசத்திற்கு வழங்கியிருக்கின்றோம்.

வவுனியாவில் நன்னீர் மீன்பிடி மாத்திரமே காணப்படுகின்றது. எனினும் வட பகுதியில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நிதியை விட கூடுதலான நிதி வழங்கப்பட்டு. அதனூடாக அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் மீன் பிடித்துறையில் பொருளாதார மையமாக வட மாகாணமே காணப்படுகின்றது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் 1980 ஆம் அண்டுகளில் இந் நாட்டின் தேசிய மீன் உற்பத்தியில் 47 வீதத்தினை வட மாகாணமும் 27 சத வீதத்தினை கிழக்கு மாகாணமும் பெற்று கொடுத்துள்ளது.

ஆயினும், யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் 7 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த மீன் பிடித்துறையை தற்போது வட மாகாணத்தில் 15 வீதமாக அதிகரித்துள்ளோம். அதேபோல் கிழக்கு மாகாணமும் 15 சதவீதத்தில் இருந்து தற்போது 23 வீதமான வளர்ச்சியை கண்டுள்ளது.

தற்போது எமக்கு தேவையாகவுள்ள விடயம் வட மாகாணத்தின் கரையோரத்திற்கு தேவையான இறங்குதுறைகள் ,நங்கூரமிடும் தளங்கள், மீன்பிடி துறைமுகங்களை ஆரம்பித்து வட மாகாணத்தின் மீன் உற்பத்தியை 50 சதவீதத்தால் அதிகரிப்பதுடன் நன்னீர் மீன்பிடியையும் அதிகரிக்க வேண்டும் என்பதாகும்.

அத்துடன் வட மாகாண தேர்தல மூலம் மீன்பிடி அமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனவே, அவருடன் இணைந்து எதிர்காலத்தில் பல அபிவிருத்திகளை முன்னெடுக்க எதிர்பார்க் கின்றேன் என்றார்.

(2-9-250)

# ஏ.ரி.எம். அட்டை பணத்தை திருடியவர் கைதானார்

(குருமன்காடு)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற தொழில் நுட்பவியலாளர் ஒருவரின தன்னியக்க பணப்பரிமாற்று அட்டையை திருடி, அவரது கணக்கிலிருந்து 35ஆயிரம் ரூபாவை எடுத்ததாகக் கூறப்படும் அதே திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளதாக விடத்தல்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.ஜே.குணதிலக்க தெரிவித்தார்.

தனது தன்னியக்க பணப்பரிமாற்று அட்டை திருடப்பட்டு கணக்கிலிருந்து 2 தடவைகள் 35 ஆயிரம ரூபா எடுக்கப்பட்டதென்று மேற்படி தொழில் நுட்பவியலாளர் [illegible] திங்கட்கிழமை முறைப்பாடு செய்ததாகவும் இந்நிலையில். இது தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு பொலிஸார் கொண்டுவந்ததைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கமைய இவ்விடயம் தொடரபில் சம்பந்தப்பட்ட வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

மேற்படி தொழில்நுட்பவியலாளரின் பணம் எடுக்கப்பட்ட தினத்தில் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தில் பொருத்தப்பட்ட பாதுகாப்புக் கமராவில் பதியப்பட்ட புகைப் படங்களுக்கமைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், பணத்தை எடுத்ததுடன், திருடப்பட்ட தன்னியக்க பணப் பரிமாற்று அட்டையை உடைத்து மலசலகூடக் குழியினுள் சந்தேக நபர் போட்டதாகவும் அவரிடம் மேற்கொண்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (2-9-250)

**மகளிர் தினத்தை முன்னிட்டு**

# பெண்களுக்கான மரதன் ஓட்டம்

(முல்லைத்தீவு)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு செம்மலை சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தினரால் பெண்களுக்கான மரதன் ஓட்டமும் மகளிர் தின நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்படி இன்றைய தினம் காலை 6 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கவுள்ள 13 வயது பெண்களுக்கான மரதன் ஓட்டம் செம்மலை சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தில் நிறைவடையவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் மகளிர் தின நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (2-9-267)

★ ★ ★ ★ ★

# அரசியலில் பெண்களின் சமவுரிமை கருத்தரங்கு

(கிளிநொச்சி)


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இன்று காலை 8 மணிக்கு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அரசியலில் பெண்களின் சம உரிமை எனும் தலைப்பில் இடம் பெறவுள்ள இக் கருத்தரங்கில் பெண்கள் அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-9-254)




**வடக்கின் வசந்தம் திட்டத்தில்**

# கோணாவில், சிவநகர், உருத்திரபுரம் கிராமங்களுக்கு மின்சார விநியோகம்



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்சாரம் வழங்கப்படாதிருந்த கிராமங்களுக்கு புதிய மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சார விநியோகம் வழங்குவதற்கான வேலைத் திட்டங்கள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி மின்சார சபையின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று சனிக்கிழமை கோணாவில் கிராமத்திற்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை சிவநகர், உருத்திரபுரம் கிராமத்திற்கும் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்தோடு நேற்றுமுன்தினம் ஜெயபுரம் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் பார்வையில் இலங்கை குற்றவாளியாக கருதப்படுவது உறுதி

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

**ஜெனீவாவில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் உரையினால் எவ்வித பயனுமில்லை. சர்வதேசத்தின் பார்வையில் இலங்கை குற்றவாளியாகவே கருதப்படுகின்றதென்பது உறுதியாகிவிட்டது. இலங்கை சர்வதேச ரீதியில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த சாதனையினை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நிகழ்த்தி விட்டது என ஐ.தே.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று முன்தினம் ஸ்ரீகொத்தாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவினால் மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையின் உயர் மட்டக் கலந்துரையாடலின் மூன்றாவது நாள் அமர்வில் ஜெனீவாவிற்கான இலங்கை தூதுக்குழுவின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான ஜி.எல்.பீரிஸின் உரையானது சர்வதேசத்திடம் எடுபடவில்லை என்பதே உண்மையாகும்.

ஓர் நாட்டினை பிரதிநிதித்துவப் படுத்தி பேசும் உரையினை அந்த நாட்டினை ஆதரிக்கும் நாடுகள் வரவேற்க வேண்டும் எனவும் அமைச்சரின் உரையின் பின்னர் இலங்கையை ஆதரிக்கும் நாடுகள் கூட ஆதரிக்கவில்லை.

இலங்கை குற்றவாளி நாடு என்பது இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. அமெரிக்காவினை எதிர்க்கும் ஒரே காரணமே அவர்கள் இலங்கை விடயத்தில் ஆதரவினை வழங்குகின்றனர் என்பதே உண்மையாகும். எனவே அமைச்சர் பீரிஸின் உரையினால் நாட்டிற்கு எவ்விதப் பயனுமில்லை என்பது உண்மையாகி விட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சியில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. உலகின் மோசமான நாடுகளின் வரிசையில் இலங்கையையும் உள்ளடக்கி விட்டனர்.



இன்று ஜெனீவா மாநாட்டின் இலங்கையின் பிரச்சினைகளை பரப்பி நாட்டினை சர்வதேச விசாரணைகள் வரையில் கொண்டு சென்றமைக்கு முழுப்பொறுப்பானது அரசாங்கமே கூற வேண்டும். அரசாங்கம் சர்வதேசத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்வதற்காக அவர்களின் உடன்படிக்கைகளை ஆதரித்து விட்டு தற்போது ஐக்கிய தேசிய கட்சியின் மீது குற்றம் சுமத்துவது முட்டாள்தனமாகும்.

ஐக்கிய தேசிய கட்சி அன்று ஆட்சியமைத்த போது எதிர்க் கட்சியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷ நியாயம் கேட்டு ஜெனீவா சென்றிருந்தார். அப்போது நானும் அவருடன் துணை நின்றேன். ஆனால் இன்று அதே தவறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்துள்ளார்.

இப்போதும் அரசாங்கத்திற்கு எதிராக நான் நியாயம் கேட்கின்றேன். இலங்கையில் மனிதவுரிமைகள் மீறப்படுகின்றது என ஜெனீவாவில் குரல் எழுப்பிய மஹிந்த ராஜபக்ஷ இன்று ஜனாதிபதியாக மனிதவுரிமை மீறல்களை செய்து வருகின்றார். இவை மிகப் பெரிய அநியாயமா கும்.

மேலும் அரசாங்கம் எம்மை தேச துரோகிகள் என்று முத்திரை குத்தி மக்கள் மத்தியில் எம்மை குற்றவாளியாக்க முயற்சிக்கின்றனர்.

இன்று இலங்கையில் மனித வுரிமை மீறல்கள் இடம்பெறுவதை சுட்டிக்காட்டும் நாம் தேசத்துரோகிகள் என்றால் அன்று இலங்கை விடயத்தை ஜெனீவாவில் முறையிட்டு இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணைகளை கோரய மஹிந்த ராஜபக்ஷ யார்? அவரே இலங்கையை காட்டிக்கொடுத்த தேசத்துரோகியாவார். மக்கள் முதலில் அவரையே தண்டிக்க வேண்டும். அன்றும் சரி இன்றும் சரி நாட்டிற்குள் முடிக்க வேண்டிய பிரச்சினையினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச ரீதியில் கொண்டு சென்றுள்ளார்.

அதேபோல் இலங்கையின் வரலாற்றிலேயே நாட்டின் மீது சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வைக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும், இந்த சாதனையை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்துள்ளது. சர்வதேசத்தின் மத்தியில் இராணுவத்தினரையும் சிங்கள மக்களையும் குற்றவாளியாக மாற்றி நாட்டை சீரழித்துள்ளார்.

மக்களிடையே பொய்யான கதைகளைக் கூறி தேர்தலில் வாக்கு பெறும் சூழ்ச்சியினை ஐக்கிய தேசிய கட்சி முறியடிக்கும் என அவர் தெரிவித்தார். (2)



தினேஷ் ஏகாம்பரம் உருவாக்கிய அணுகுண்டுகள் குறும்பட வெளியீடும் ஏனைய 6 குறும்படங்களின் அறிமுகமும் அண்மையில் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது...


5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 31 05 1993

உதிர்வு 08 03 2009



(5765)

அமரர்: குமாரசாமி சங்கீர்த்தனன்

ஆண்டு ஓர் ஐந்து ஆனாலும்
நீண்ட தூரம் நீ சென்றாலும்
நீண்டு வரும் நினைவுகளோ மாறாது
ஆண்டவனை வேண்டுகிறோம்
மீண்டும் நீ வேண்டும் என்று

பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்தாய்
அள்ளி அணைத்து மகிழ்ந்திருந்தோம்
கள்ளி முட் பற்றையாய் எமை நெருடும்
தள்ளி சென்று விட்டாய் எம்மகனே
துள்ளி நீ திரியும் காலமது வாராதோ?

2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

குமாரசாமி
குடும்பத்தினர்.


### சர்வதேச விசாரணையை வலியுறுத்திய மொரீசியஸிற்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

மொரீசியல் தீவு ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது. இதற்காக அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளது.

இந் நிலையில் மொரீசியசுக்கு இலங்கை அரசாங்கம் குறித்த விடயத்தில் கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம்பெற்ற இந்தியா. இலங்கை. மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையிலான முத்தரப்பு கடல்பாதுகாப்பு மாநாட்டில்மொரீசியஸூம் சீசெல்சும் பார்வையாளர்களாக பங்கேற்றிருந்தன.

பெரும்பாலும் இக்குழுவில் குறித்த இரண்டு நாடுகளும் இணைந்து கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான போக்கினை மொரிசீயஸ் கொண்டுள்ள நிலையிலேயே இலங்கை அரசாங்கம் அதற்கு கண்டனம் தெரிவித்திருக்கிறது. (2)


## காணி/ வீடு விற்பனைக்கு

காணி விற்பனைக்கு — **பெரியபரந்தன்**
பெரியபரந்தனில் 12 ஏக்கர் நெற் செய்கைக் காணி உடன் விற்பனைக்குண்டு (சிறு போகத்திற்கு இரணைமடு குளநீர் பாய்ச்ச முடியும்) (A/009)

காணி விற்பனைக்கு — **யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 13 குளி காணி (கிணறு . பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/004)

காணி விற்பனைக்கு — **கொடிகாமம்**
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை. மா. பனைகளுடன்) உடன் விற்பனைக்கு. (A/005)

காணி விற்பனைக்கு — **யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு. (A/006)

காணி/ வீடு விற்பனைக்கு — **கோப்பாய்**
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை. மா. பலா. தோடை என பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. (A/007)

காணி/ வீடு விற்பனைக்கு — **திருநெல்வேலி**
திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 7 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (40 தென்னை. மா பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு (A/008)

றியல் எஸ்ரேற் இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளை யார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை வெள்ளிக்கிழமை விடுமுறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

741

## தண்டனைக்குத் தகுந்த குற்றம்

உடனே, தோட்டக்காரனின் மனைவி தலைவிரி கோலமாக பீர்பால் வீட்டிற்கு ஓடிப்போய், அவரை சந்தித்துத் தன் கணவனை எப்படியாவது விடுவிக்குமாறு மன்றாடினாள். அவள் மீது இரக்கம்கொண்ட பீர்பால் "கவலைபடாதே, உன்கணவனை விடுதலை செய்ய முயற்சிக்கிறேன்" என்று சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்.

சிறை அதிகாரியிடம் தோட்டக்காரன் எங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறான் என்ற விவரத்தை அறிந்தபின், அவனைச் சந்திக்க அனுமதி கேட்டார். பீர்பால் சக்கரவர்த்திக்கு மிகவும் நெருங்கியவர் என்பதால், தோட்டக்காரனை சந்திக்க உடனே அனுமதி கிடைத்தது. அவனுக்கு தைரிய மூட்டிய பீர்பால் அவனிடம் ரகசியமாக ஏதோ கூறினார். அதைக் கேட்ட தோட்டக்காரன் "ஐயோ, உயிர பிழைக்க வழி சொல்வீர்கள் என்று பார்த்தால் உயிர் போக வழி சொல்கிறீர்களே" என்று அலற, "நான் சொல்வதுபோல் செய், ஒன்றும் ஆகாது" என்று கூறிவிட்டு பீர்பால் சிறைச்சாலையைவிட்டு அகன்றார.

மறுநாள் காலை தர்பார் கூடியது. அக்பர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது காவலர்கள் உள்ளே நுழைந்து, தோட்டக்காரன் தூக்கிலிடுமுன் மன்னர் பிரபுவை பார்க்க விரும்புவதாகக் கூறினார்கள். அக்பரும் அதற்கு சம்மதிக்க, கைவிலங்குடன் உள்ளே நுழைந்த தோட்டக்காரன் அக்பருக்கு சலாம் செய்துவிட்டு, பின்னர் திடீரென சபையில்காறி உமிழ்ந்தான.







அதைக் கண்ட அக்பருக்கு பயங்கர கோபம் உண்டாகியது. உடனே, தோட்டக்காரன் பணிவுடன், "மன்னிக்கவும் பிரபு, என்னுடைய சாதாரணத் தவறுக்காக நீங்கள் தூக்கு தண்டனை விதித்திருப்பது நியாயம் அல்ல என்று மக்கள் உங்களை எதிர்காலத்தில் அவதூறாகப் பேசலாம். அப்படி உங்களைக் குறை கூறக் கூடாது என்பதற்காகத்தான் தர்பாரில் காறி உமிழ்ந்தேன். இனி உங்களை யாரும் குறை கூற மாட்டார்கள். நான் நிம்மதியாக சாகலாம்" என்றான்.

உடனே அக்பருக்கு அவன் தன் நியாயமற்ற தண்டனையை குத்திக் காட்டுகிறான் என்று விளங்கிவட்டது. அதேசமயம், இந்த யோசனை அவனுடையதல்ல வேறு யாரோ அவனுக்கு சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றும் புரிந்தது.

"இந்த யோசனையை உனக்கு யாரப்பா சொல்லிக் கொடுத்தார்களா?" என்று அக்பர் கேட்க, தோட்டக்காரன் பீர்பால் பக்கம் நோக்கினான். உடனே அக்பருக்கு புரிந்துவிட்டது. "பீர்பால், ஏதோ கோபத்தில் தெரியாமல் அவனுக்கு தூக்கு தண்டனை விதித்துவிட்டேன். அந்தத் தவறு நிகழாமல் தடுத்ததற்கு உனக்கு நன்றி" என்றார் அக்பர். அத்துடன் தோட்டக்காரனை விடுதலை செய்வதாக அறிவித்தார். (முற்றும்).

## அனைத்துலக மகளிர் தினம்



அனைத்துலக மகளிர் தினம் (International Women's Day) ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதியன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை நாளாகும்.

1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெறவேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இடியென முழங்கி, இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் எனவும் அறிவித்தான்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம். அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க அரச மாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது. அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிபபேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப்படுத்தினான். இயலாது போகவும், அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான்.

இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்ட நாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். பிரான்சில், புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க், பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி ஆகும். அந்நாள்தான் அனைத்துலக பெண்கள் தினம் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.



03.2014 08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1618 - ஜொஹான்னெஸ் கெப்லர் கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.
- 1761 - வடக்கு லண்டனில் ஹாம்ப்ஸ்டட் நகரில் நில நடுக்கம் பதியப்பட்டது.
- 1782 - ஐக்கிய அமெரிக்காவின் ஒகைய்யோ மாநிலத்தில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறிய 90 அமெரிகக இந்தியப் பழங்குடிகள் பென்சில்வேனியாவின் துணை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 68 பேர் குழந்தைகளும் பெண்களுமாவர்.
- 1817 - நியூயோர்க் பங்குச் சந்தை நிறுவன மயப்படுத்தப்பட்டது.
- 1911 - அனைத்துலக மகளிர் நாள் முதன் முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.
- 1917 - ரஷ்யாவில் பெப்ரவரிப் புரட்சி (பெப்ரவரி 13 - பழைய நாட்காட்டியில்) ஆரம்பம்.
- 1921 - ஸ்பெயின் பிரதமர் எடுவார்டோ டாட்டோ மாட்ரிட்டில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவாவில் ஜப்பானியப் படைகளிடம் டச்சுப் படைகள் சரணடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் ரங்கூன் நகரை ஜப்பான் கைப்பற்றியது.
- 1950 - சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்தது.
- 1957 - எகிப்து சுயஸ் கால்வாயை மீண்டும் திறந்தது.
- 1965 - வியட்நாம் போர்: 3,500 அமெரிக்கப் படைகள் தென் வியட்நாமில் தரையிறங்கினர்.

### பிறப்புக்கள்

- 1879 - ஒட்டோ ஹான், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1968)
- 1886 - எட்வர்ட் கெண்டல், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1972)
- 1908 - பாலகங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்.

### இறப்புக்கள்

- 1922 - சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர், ஈழத்துப் புலவர் (பி. 1854)
- 1923 - ஜொஹானஸ் வான் டர் வால்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1837)
- 2004 - அபூ அப்பாஸ், பாலஸ்தீன விடுதலை முன்னணி ஸ்தாபகர் (பி. 1948)

### சிறப்பு நாள்

அனைத்துலக மகளிர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....அந்த வரத்தின்படியே அகத்தியரின் கோரிக்கைக்குச் செவிசாய்த்தார் சிவபெருமான்.

சுந்தரானந்தர் ஆசிரமத்தில் தம்மைப் பூசித்துக் கொண்டிருந்த அகத்திய முனிவருக்கு ரிஷப வாகனத்தில் உமையவளுடன் காட்சி தந்து தமது திருமணக் கோலத்தையும் அவருக்குக் காட்டியருளினார்.


இறைவனின் திருமணக் காட்சியைக் கண்டதும் அகத்தியரின் கண்களில் நீர் தளும்பியது. அவரைச் சூழ்ந்து நின்ற சுந்தரானந்தர் முதலான சித்தர்களுக்கும் இறைவனின் திருமணக் காட்சி தரிசனம் கிடைத்ததால் அவர்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து இறைவனின் புகழைப் போற்றி வணங்கினர்.

அதே சமயம் இறைவனின் இந்தத் திருமணக் காட்சியைக் காண்பதற்காக பிரம்மா, விஷ்ணு, விநாயகர், சுப்ரமணியன் ஆகியோர்களும் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் ஆகியோருடன் ரிஷிகளும் முனிவர்களும் அங்கு வந்து இறைவனின் திருமணக்கோலம் கண்டு ஆனந்தம் அடைந்தனர்.

சிவபெருமானும் மற்ற தேவர்களும் அகத்தியர் முதலான சித்தர்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஆசி வழங்கி சதுரகிரி மலையில் இருந்த கானல்களில் தங்கியிருந்தனர்.

அதன்பின்னர் அகத்தியர் தினமும் லிங்க பூசை செய்து மூன்று கானல்களில் எழுந்தருளியிருக்கும் மும்மூர்த்திகளையும் தரிசித்துவரும் போது ஒரு நாள் சுந்தரானந்தர் அகத்தியரிடம், சுவாமி, உங்களது இந்த லிங்க பூசை மகிமையினால் நாங்களும் கயிலைக்குச் செல்லாமலேயே இறைவனின் திருமணக் காட்சியை உம்மோடு சேர்ந்து தரிசிக்கும் பேறு பெற்றோம். எனவே மகத்துவம் நிறைந்த இந்தச் சிவலிங்க பூசையை அடியேனும் செய்துவர தாங்கள் அனுமதி தரவேண்டும் என்று பணிவுடன் விண்ணப்பித்தார்.

சுந்தரானந்தரின் விண்ணப்பத்தைக் கேட்ட அகத்தியர் மகிழ்ச்சியுடன், சுந்தரானந்தரே, நல்ல நேரத்தில் உங்கள் விருப்பத்தைத் தெரிவித்தீர். நான் தவத்துக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டதால் இந்தச் சிவலிங்கப் பூசையை யாரிடம் ஒப்படைத்துச் செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் இறைவன் உங்களை இப்பணி செய்ய விருப்பம் கொண்டான் போலும். எனது ஆசீர்வாதம் உங்களுக்கு எப்போதும் உண்டு. இந்த லிங்கத் திருமேனிக்கு இனி நீங்களே வழிபாடு செய்யுங்கள் என்று கூறி சிவலிங்கப் பெருமைகளையும் சிவ வழிபாடு செய்யும் முறைகளையும் அவருக்கு உபதேசித்தார்.



அகத்தியர் ஸ்தாபித்த லிங்கம், சுந்தரானந்தர் பூஜித்த லிங்கம்

சுந்தரானந்தரிடம் சிவ பூசையை ஒப்படைத்த அகத்தியர் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சதுரகிரியின் பக்கத்திலிருக்கின்ற மலைக்குச் சென்று அங்கு தவத்திலாழ்ந்தார். கும்ப முனியாகிய அகத்தியர் தவம் செய்த மலையும் அவரது பெயராலேயே கும்பமலை என்று அழைக்கப்பட்டது.

## ஆன்மீகம் 55

அகத்தியர் ஸ்தாபித்த லிங்கத்திற்குப் பூசை செய்யும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொன்ன சுந்தரானந்தர், அகத்தியரின் அருளாணைப்படியே அவர் ஸ்தாபித்த லிங்கத்திற்கு அவர் சொன்ன முறையிலேயே தினசரி பூசை செய்து வரலானார். இவ்விதம் நீண்ட காலம் சுந்தரானந்தர் பூசை செய்து வந்தமையால் அந்த மூர்த்திக்கு சுந்தரலிங்கம் அல்லது சுந்தரமூர்த்தீஸ்வரர் என்று பெயர் வழங்கப்படலாயிற்று.

அகத்தியர் ஸ்தாபித்த லிங்கம், சுந்தரானந்தர் பூஜித்த லிங்கம் என்ற பெருமைமிகு இந்தச் சுந்தரமூர்த்தியை நாங்களும் தரிசிக்கும் பேறு பெற்றது இறைவனின் பெருங்கருணை என்றுதான் சொல்ல வேண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிக்கு அரோகரா! என்ற பக்தர்களின் கோஷம் எங்களை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

அபிஷேகம் ஆரம்பமானது.

பின்னணியில் பக்தர்களிடையே திருவாசகம் பாராயணம் செய்யப்படுகிறது. *(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன்.
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**67**

....அப்போதெல்லாம் செம்மல் பால் சாப்பிடுவார். எனக்கும் பால் கொடுத்து "பால் கொடுத்தா... அடுத்து என்ன டயலொக்" என்று கேட்க "பகை நீங்கும்"னு சொன்னேன். "நமக்குள்ளே அதுவா இருந்தது" எனக் கேட்டு பாலை அருந்தினேன்.

உடனே செம்மல் போனில் தன் அண்ணனுடன் பேசினார். "ரவீந்திரன் வந்திட்டாரு. நாளையிலேருந்து தோட்டத்துக்கு வரச் சொல்லி வேலைகளை கொடுக்கிறேன். வழக்கம்போல நாம கொடுப்பதை அவருக்குக் கொடுத்துடுங்க" என்றார்.

அது, அன்று முதல் அவரது கடைசி மூச்சு வரை எனக்குக் கிடைத்தது...

### மூட்டாள்

கதை எப்படி இருக்க வேண்டும். அதில் என்னென்ன விடயங்களைப் புகுத்த வேண்டும் என்பதை செம்மல் எப்போதும் சொல்லுவார். அதனைச் செய்து கொடுப்பது என் பணி.

கிழக்கு ஆப்ரிக்காவில் ராஜு படத்திலும் மக்களுக்கு என்ன பாடம் சொல்ல வேண்டும், எந்தெந்த விடயங்கள் அதில் வலியுறுத்தப்பட வேண்டுமெனச் சொன்னார்.

"மகாத்மா காந்தி செய்த பணிகள். குடியேற்ற சட்டக் கட்டுப்பாடு, சுதந்திரம் வாங்கி ஏழாண்டுகளில் அந்த அரசு செய்த சாதனை. மக்கள் தந்த ஒத்துழைப்பு, ஆளுநரோ ஆட்சித் தலைவரோ (ஜனாதிபதி) மட்டும்தான் குற்றங்களைக் களைய வேண்டும். நாட்டுக் குறைகளை நீக்க வேண்டும் என்றல்ல. ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்த உரிமையும் பொறுப்பும் உண்டு என்று அந்த நாட்டு மக்கள் நினைக்கிறார்கள். அதற்கு கதையில் முக்கியத்துவம் வேண்டும்.




எங்க வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர். அவர்களை வரவேற்கிறார் பி.நாகிரெட்டி

அங்கு ஒரு இன்ஸ்பெக்டர் எனக்கு நண்பரானார். இடி அமீன் மாதிரி உருவம். சட்டத்தின் கெடுபிடியான காவலர். நட்புக்கு அடிமை, அவரது உருவத்தைப் போல் தேடிப்பிடித்து ஒரு ஆப்ரிக்க நடிகரைப் போடுவோம். எனக்கு க்ளைமாக்ஸ்தான் முக்கியம்.

அங்கு ஸ்பேம்பேஜ் என்ற நிகழ்ச்சி... சீதோஷ்ணம் மாறும் போது இலட்சக்கணக்கான மிருகங்கள் காடுவிட்டு காடு ஓடும். அப்போது புழுதி பறக்கும். அது வானைத் தொட்டு நிற்கும். இந்தக் காட்சியைப் பார்க்கவே வெளிநாட்டுப் பயணிகள் வருவர். அதை அங்குள்ள பைப்பர்கள் மூலம் ஏறிப் பறந்து பார்ப்பர். அந்தச் சிறு விமானங்கள் சிகப்பு நிறத்தில் இருக்கும். வானை மறைத்து நூற்றுக்கணக்கான விமானங்கள் பறக்கும். அந்த மிருகங்கள் இடம் பெயரும் மூன்று நாட்களை ரெட்ஸ் கைடே என்று சொல்லுவார்கள். ஆப்பிரிக்கா வரும் பயணிகளுக்கு இது கண்கொள்ளாக் காட்சி.

அடுத்து சிங்கங்கள். அங்கு நாய் போல் உலவும். அந்த சிங்கங்கள் மத்தியில் நல்ல சீன் வையும்.

மொத்தத்தில் எல்லாம் கதையோடு பின்னி சிச்சுவேசனாயிருக்கணும். டாக்குமெண்டரியா இருக்கக் கூடாது. உலகம் சுற்றும் வாலிபனைவிட இரண்டு மடங்கு செலவழிக்க விரும்புகிறேன். போயி உம்ம வேலையை ஆரம்பியும். நம்ம கம்பெனிக்கு கதை எழுத ரூம் போட்டு எழுத மாட்டீர். இதுக்கு தேவைன்னா தாஜ் கோரமண்ட்லே போட்டுக்கலாம் என்றார்.

வேணாங்க... என் கற்பனைக்கு என் குடிசையே போதும் என்று சொல்லி வந்து விட்டேன்.

இந்தப் படத்தின் தயாரிப்பின் பொறுப்பு இதயம் பேசுகிறது மணியன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இயக்குநர் கே.சங்கர் அவர்கள். அவர்களது அபிப்பிராயங்களையும், மணியன் அவர்கள் கொடுத்த ஆப்பிரிக்கா சம்பந்தப்பட்ட பல படங்கள், பல குறிப்புகள், சில புத்தகங்களையும் படித்து கதை எழுதத் துவங்கினேன். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியகீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடவேண்டும்



(கொழும்பு)

தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவாக தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பது அரசியல் சாசனத்திற்கு முரணானது. பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தேசிய கீதம் எவ்வாறு இசைக்க வேண்டும் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த விடயங்களை பின்பற்றாதவர்கள் அரசியல் சாசனத்தை மீறியவர்களாகவே கருதப்படுவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மொழியில் இசைப்பதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


எனினும் சில பகுதிகளில் தமிழ் மொழியில மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மக்களுக்கு விரும்பியவாறு தேசிய கீதத்தை இசைக்க அனுமதிக்க முடியாது எனவும், அவ்வாறு செய்ய வேண்டுமாயின்சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேணடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)



*அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சாரணர்களுக்கான போட்டியில் தேசிய விருதை பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி 8 மாணவிகள் சாரணிய உயர் விருதான ஜனாதிபதி விருதை பெற்றுக் கொண்டனர். இவ்விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றபோது பொறுப்பாசிரியருடன் மாணவிகள் நிற்பதை படத்தில் காணலாம். (படம் :- கரவெட்டி செய்தியாளர்)*

## லொறி விபத்தில் ஐந்து இலங்கையர் படுகாயம்



(தூத்துக்குடி)

தூத்துக்குடி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து இலங்கை அகதிகள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டம் கொட்டப்பத்து இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த அகதிகள் 10 பேர் நேற்றுமுன்தினம் நாகர்கோவிலில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வேலைக்காகச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளை இரவு 11 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற லொறி வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது பின்னால் வந்த மற்றுமொரு லொறி அதில் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 5 பேரும் நோயாளர் காவு வண்டியின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இரு லொறிகள் மோதி விபத்து ஏற்பட்டு சிறிது நேரத்தில் மற்றுமொரு லொறி பின்னால் வந்து விபத்துக்குள்ளான லொறி மீது மோதி ஏற்பட்ட விபத்தில் 3 பேரும் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர். (2)

# சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைக்கு ஆப்கான் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது

## அந்நாட்டு ஜனாதிபதி கர்சாய் தெரிவிப்பு

***(கொழும்பு)***

***சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஆப்கானிஸ்தான் இலங்கையை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் தெரிவித்துள்ளார்.***



கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையும், ஆப்கானிஸ்தானும் வன்முறைச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட நாடுகள். எனினும் இலங்கையில் தற்பொழுது சமாதானம் ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானிலும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

இலங்கை பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வருவதுடன், கல்வியறிவு மிக்க சமூகத்தைக் கொண்டதொரு நாடு. அதிர்ஷ்டவசமாக இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது. நாட்டை முன்கொண்டு செல்லக் கூடிய சரியானதொரு பாதையில் இலங்கை சென்றுகொண்டுள்ளது. நாட்டின் மனித உரிமைகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சமாதானம் ஒரு கருவியாகும்.

சமாதானத்தை நிலைநாட்ட இலங்கையின் அனுபவத்தை ஆப்கானிஸ்தான் முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். இலங்கை எவ்வாறு சமாதானத்தை எட்டியது என்பது குறித்து ஆப்கானிஸ்தானில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிக்கு நான் விளக்கமளிக்க எதிர்பார்த்துள்ளேன்.

நாட்டில் சமாதானத்தையும், நிலைப்புத் தன்மையையும் ஏற்படுத்த இலங்கையை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ள முடியும் என்பதை புதிய ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவேன் என்றும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் செய்து கொள்ளப் படவிருக்கும் இருதரப்பு பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கே நாம் முன்னுரிமை கொடுத்து வருகின்றோம். சமாதானத்தை குலைக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லையெனக் கூறினார்.

நாட்டு மக்களின் மனித உரிமைகளையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அந்நாட்டில் சமாதானம் இருப்பது அவசியம், ஆப்கானிஸ்தானிலும் இதனை நிலைநாட்டவே நாம் விரும்புகின்றோம் என்றார்.

ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2)

# ஆபி.ஒன்றியத்தின் அங்கீகாரம் பெற இலங்கை முயற்சி

(கொழும்பு)


ஆபிரிக்க ஒன்றியத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க ஒன்றியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடாக இலங்கையை மாற்றும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

54 நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க ஒன்றியம் இதுவரையில் உலகின் 72 நாடுகளை அங்கீகரித்துள்ளது. ஆசிய நாடுகளின் வரிசையில் ஜப்பான், பாகிஸ்தான், இந்தியா, கொரியா, சீனா போன்ற நாடுகளை ஆபிரிக்க ஒன்றியம் அங்கீகரித்துள்ளது.

இலங்கையையும் குறித்த நாடுகளின் வரிசையில் இடம்பிடிக்கச் செய்யும் முயற்சிகளில் வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த 1999ஆம் ஆண்டு ஆபிரிக்க



ஒன்றியம் உருவாக்கப்பட்டது. நாடுகளுக்கு இடையில் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ள நிலையில் அரசாங்கம் பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்பைக் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# சர்வதேசத்திற்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

## சாடுகிறார் ரணில்

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேசத்திற்கு அளித்த வாககுறுதிகளை நிறைவேற்றவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளதாக எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது உதாசீனம் செய்கின்றது. அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் முன்வைக்காமல் இருந்திருக்கலாம்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

பல்வேறு காரணங்களைக் கூறி பரிந்துரைகளை அமுல்படுத்துவதனை அரசாங்கம் உதாசீனம் செய்து வருகின்றது என ரணில விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, ஜெனீவா மற்றும மனித வுரிமை விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போது நிதானமாக இருக்க வேண்டுமென கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளியிடப்படும் கருத்துக்களை திரிபுபடுத்தி எதிர்க்கட்சிகள் மீது அரசாங்க ஊடகங்கள் தேசத்துரோக முத்திரை குத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவ பேரவையின் உறுப்பினர் களுக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளன. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்மதிப்பு பட்டங்கள் அனைத்தும் வழங்கும் உரிமை ஜனாதிபதிக்கு

## பாராளுமன்றில் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

**தேசமான்ய, தேசபந்து போன்ற தேசிய நன்மதிப்பு மிக்க பட்டங்கள் அனைத்தும் ஜனாதிபதியினாலேயே வழங்கப்படுவதாகவும் வேறு நிறுவனங்கள் இதுபோன்ற பட்டங்களை சட்டவிரோதமாக வழங்குவது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல வினாக்கள் வேளையில் ஐ.தே.க.எம்.பி. ஹர்ச டி சில்வா எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசமான்ய, தேசபந்து, லங்கா புத்ர, கலாநிதி போன்ற கௌரவப் பட்டங்களை வழங்குவது எந்த நிறுவனம் அல்லது வழங்கும் நபர்கள் யார் என்பது தொடர்பில் தகவல்களை வழங்க முடியுமா என ஹர்ஷ டி சில்வா எம். பி. கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தேசபந்து மற்றும் தேசமான்ய போன்ற பட்டங்கள் ஜனாதிபதியினாலேயே வழங்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தவொரு அரச நிறுவனங்களினாலும் இதுபோன்ற பட்டங்கள் வழங்கப்படுவதில்லை.

இதுபோன்ற பட்டங்களை வழங்க எந்தவொரு தனியார் நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ. தே. க. எம். பி.அஜித் பீ. பெரேரா இது குறித்துத் தெரிவிக்கையில்,

அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகங்கள் மற்றும் உள்நாட்டு, சர்வதேச நிறுவனங்களினால் வழங்கப்படாத பட்டங்கள் பாராளுமன்ற ஆவணங் களில் எம்.பிக்கள் சிலரது பெயர்களுக்கு முன்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டார். தேசமான்ய, தேசபந்து, லங்காபுத்ர, கலாநிதி மற்றும் ஸ்ரீலங்கா ஜனரஞ்சன போன்ற பட்டங்கள் ஜனாதிபதியினாலேயே வழங்கபபட வேண்டியவை எனக் கூறப்படுகிறது.

எனினும் பல்கலைக்கழகங்களினாலோ அல்லது சர்வதேச நிறுவனங்களினாலோ வழங்கப்படாத பட்டங்கள்பாராளுமன்ற ஆவணங்களில் எம்.பிக்கள் சிலரின் பெயர்களுக்கு முன்னால் பயன்படுத்தப்படுகிறது.

இவற்றை நீக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அஜித் பி. பெரேரா எம்.பி. சபையில் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து சபாநாயகர் ராஜபக்ஷ இது விடயம் தொடர்பில் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் எனத் தெரிவித்தார்.(2)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் பத்தரமுல்லையிலுள்ள நாடாளுமன்ற மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயிர்நீத்த இராணுவ வீரர்களுக்கான நினைவு தூபிக்கு மலர் வலயம் வைத்து அஞ்சலி செலுத்துவதையும் இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்க மற்றும் அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# திருக்கேதீஸ்வரம் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் மயானம்

## தொல்பொருள் திணைக்களம் கூறுகின்றது

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம ஓர் மயானம் என தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக மன்னாரில் பாரிய மனித புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மனித புதைகுழியிலிருந்து மனித உடற் பாகங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்த சடலங்கள் புதைக் கப்பட்ட இடமானது பாரிய மனித புதை குழி அல்ல எனவும் அந்த இடம் ஓர் மயானம் எனவும் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த அமைப்பு மற்றும் மண்ணின் கட்டமைப்பு ஆகியவற்றை கருத்திற் கொள்ளும் போது இது ஓர் மயானமாக இருந்திருக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பெட்டிகளில் இட்டு சடலங்கள் புதைக்கப்படடிருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அநேகமான சடலங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக கப்பட்டவை எனவும், சில 100 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப் பட்டவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1936தொடக்கம் 1938ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் சில பகுதியில் நிலவிய மலேரியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களாகவும் இவை இருக்கக் கூடுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது,

எனினும், இந்த மனித உடற் பாகங்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை தற்போதைக்கு வெளியிட முடியாது என தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

மண்டையோடுகள் மற்றும் எலும்புக் கூடுகள் தொடர்பில் மேலதிக விசாரணை நடத்தியதன் பின்னரே சரியான தகவல்களை வெளியிட முடியும் என குறிப்பிட்டுள்ளது. (2)

# பெண்களுக்கெதிரான பிரச்சினைகளை விசாரணை செய்ய மனுக்குழு நியமிப்பு

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பிரச்சினைகளை விசாரணை செய்து அவற்றுக்குத் துரித தீர்வு காணும் வகையில் உப பொது மனுக்குழுவொன்றை நியமித்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள பொது மனுக்குழுவுக்கு உறுதுணையாகவே இந்த உப மனுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் இந்த உப மனுக்குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரள, ரோஸிசேனநாயக்க ஆகியோரும் செயற்படவுள்ளதாக சபாநரயகர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் சபையில் அறிவித்தார். (2)

# சட்டவிரோதமாக சவுதி பயணிக்க முயன்ற 13 பெண்கள் விமான நிலையத்தில் கைது

சுற்றுலா விசாவில் டுபாய் செல்வதாகக் கூறி சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்புக்காக செல்ல முற்பட்ட 13 பெண்கள்கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரிடமும் தலா இரண்டு கடவுச் சீட்டுகள் வீதம் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலா விசாவில் டுபாய் செல்வதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளிடம்ஒருகடவுச்சீட்டை காண்பித்து உள்ளே சென்ற பின்னர் சவுதி செல்வதற்கான கட வுச் சீட்டை குடிவரவு குடியகல்வு அதி காரிகளிடம் காண்பித்து செல்லும திட்டத்துடனேயே இவர்கள் விமான நிலையத்துக்கு வநதிருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்கள் குடும்ப பினனணிக்கான சான்றிதழ், பயிற்சிச் சான்றிதழ், வைத்திய அறிக்கை, போன்றவை சமர்ப்பிக்க வேண்டும. இவற்றை பெற்றுக் கொள்ளாமல் பணியக அதிகாரிகளை ஏமாற்றிவிட்டு செல்லும் முயற்சியையே இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி, வெலிகந்த, கம்பஹா, கிரிந்திவல, கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். துணை முகவர் ஒருவரின் மூலம் இவர்கள் சவுதி செல்ல முயன்றுள்ளனர்.

இவ்வாறு சுற்றுலா விசாவில் செல்பவர்களுக்கு வெளிநாட்டில் ஏதேனும் பிரச்சினை ஏற்படுமாயின் பணியகம் எவ்வித பொறுப்புக் கூறலுக்கும்முன்வரமாட்டாதுஎன்பதுடன் சுற்றுலா விசாவில் எவரையும் செல்ல வேண்டாம்என்றும்பணியகம கேட்டுக்கொள்கிறது. கைதான பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பணியகம் ஆயத்தமாகியுள்ளது. (2)

# இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகர் கிளிநொச்சி பாடசாலைக்கு விஜயம்

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் வித்தியாலயத்திற்கு இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகர் விஜயம் செய்துள்ளார்.

உலக உணவுத்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு நாள்தோறும் வழங்கப்படும் உணவு தொடர்பாக ஆராய்வதற்காகவே நேற்று முன்தினம் அவரது விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இவருடன் உலக உணவு திட்டத்தின் பிரதிநிதி, கிளிநொச்சிக்கான உணவு திட்டத்தின் பிரதிநிதி, அபிவிருத்தி உத்தியோகத்தகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறை, தேவைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் கற்றல், கற்பித்தலுக்கான போதியளவு வசதிகள் அரசினால் ஏற்படுத்தப்படவில்லை. அதிபருக்கான பிரத்தியேக அலுவலகமும் இதுவரை கட்டிக் கொடுக்கப்படவில்லை.

இருந்த போதிலும் கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நூறு சத வீத சிறப்பு பெறுபேற்றைப் பெற்ற பாடசாலை என்ற சிறப்பை கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக நீண்ட தூரம் பயணிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# 36 கிலோகிராம் ஹெரோயின் சுங்கப்பகுதியினரால் கைப்பற்று

(கொழும்பு)

இலங்கைக்குள் ஹெரோயின் போதைப்பொருளை கடத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வியாழன் மாத்திரம் பாகிஸ்தானிலிருந்து கொண்டு வரப்பட்ட 36 கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கராச்சி நகரில் இருந்து இலங்கையில் உள்ள பாகிஸ்தானியர் ஒருவரின் முகவரிக்கு இந்த ஹெரோயின் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இரண்டு பல்லைக் பெட்டிகளில் இந்தப் போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளது.

எட்டு அங்குல பாரிய ஆணிகளினால் இந்தப் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

மிகவும் நுட்பமான முறையில் இவை கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உருகொடவத்தையில் உள்ள களஞ்சியம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்த ஹெ ரோயின் போதைப்பொருளை இலங்கை சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண்ணில் நிகழ்ந்தேறியது மறுக்க முடியாத இனப்படுகொலை

நிரந்தர மக்கள் தீர்ப்பாய நீதியாளர்களில் ஒருவரான டெனிஸ் ஹாலிடே கனடாவில் பங்குபற்றிய முக்கிய நிகழ்வொன்றில் இரு முக்கிய விடயங்கள் பற்றி உரையாற்றியுள்ளார். அவர் ஆற்றிய உரையில்,

இந்தியாவின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான ராஜீவ் காந்தி தேர்தல் வேட்பாளராக நின்றவேளையில் கொல்லப்பட்ட வழக்கில் குற்றமற்ற நிரபராதிகளான முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட 26 பேருக்கும் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் உச்ச நீதிமன்றம் இதில் 19 பேரை விடுதலை செய்து மூவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. நான்கு பேரின் தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டது.

இந்த நால்வரில் ஒருவரான நளினியின் கருணை மனு ஏற்கப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. மிகுதி மூவருமே மொத்தம் 23 ஆண்டுகளை தூக்குத்தண்டனையை எதிர்பார்த்து சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த மூவரும் இந்தியக் குடியரசின் தலைவருக்கு அனுப்பிய கருணைக் கோரிக்கைக்கு 11 ஆண்டுகள் முடிவுற்றும் பதிலளிக்கப்படவில்லை.

இந்த வருடம் ஜனவரி மாதம் வேறொரு வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த 15 பேருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இதனை மேற்கோள் காட்டி தாக்கலான மனுவை ஏற்ற உச்ச நீதிமன்றம் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கும் ஆயுள் தண்டனையாக மாற்றியது.

அத்துடன் இவர்களது தண்டனையின் எதிர்காலத்தை இந்திய சட்டப்படி மத்திய அரசு தீர்மானிக்கலாம் எனவும் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் தமிழக அமைச்சரவை அவசரமாகக் கூடி மரணதண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னைய நால்வரையும் சேர்த்து மொத்தம் 7 பேரையும் விடுதலை செய்வதாக தீர்மானித்ததை முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் அனைத்துக் கட்சிகளதும் ஏகோபித்த வரவேற்புக்கு மத்தியில் அறிவித்தார்.

இந்த முடிபை மத்திய அரசுக்கு அறிவித்ததுடன் மூன்று நாட்களுக்குள் கருத்தை அறிவிக்குமாறு மாநில முதல்வர் கால அவகாசம் வழங்கினார்.

காங்கிரசின் அடுத்த தலைவர் எனக் கூறப்படும் ராகுல் காந்தி தமது தந்தையைக் கொலை செய்தவர்களை விடுதலை செய்யும் ஜெயலலிதா அரசின் முடிவைக் கண்டித்து அறிக்கைவிட்டார். ராஜீவ் காந்தியையும் இந்தியக் குடிமக்கள் பலரையும் கொன்றவர்களை விடுதலை செய்வது நீதியின் கொள்கைகளுக்கு முரணானது என்று பிரதமர் மன்மோகன் சிங் தமது பங்குக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டார். உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கு உட்பட்ட இந்தியச் சட்டத்தின் அடிப்படையிலேயே ஜெயலலிதா அரசு இந்த முடிபை எடுத்தது என்பதை ராகுல் காந்தியும் மன்மோகன் சிங்கும் கள்ளத்தனமாக மறைத்துவிட்டனர்.

மத்திய அரசு ஒப்புதல் வழங்காது விட்டாலும் அந்த ஏழு பேரையும் மாநில அரசினால் விடுதலை செய்ய முடியும் என்பதை நன்கு தெரிந்து கொண்ட மத்திய அரசு அவர்களை விடுதலை செய்வதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது. இதனை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் 7 பேரின் விடுதலைக்கும் இடைக்காலத்தடை விதித்துள்ளது.

இப்போது இந்த ஏழு பேரினதும் எதிர்காலம் மத்திய- மாநில அரசுகளுக்கிடையில் நீதிக்கும் சட்டத்துக்கும் இடையிலான பெரும் போராக மாறியுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழர்களை கொலை செய்து பல்வேறு பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி தமிழ்மண்ணில் பெரும் சொத்தழிவுகளை ஏற்படுத்திய இந்திய இராணுவத்தை அங்கு அனுப்பி வைத்தவர் ராஜீவ் காந்தி.

இவரைக் கொலை செய்தது விடுதலைப் புலிகளே என்று போதிய ஆதாரமின்றி தீர்ப்பளித்த இந்திய நீதிமன்றம் 23 வருடச் சிறைவாசத்தின் பின்னர் அவர்களை விடுதலை செய்வதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இந்திய காங்கிரசின் உள்நோக்கம் என்ன?

அடுத்ததாக, டெனிஸ் ஹாலிடே அவர்கள் ரொறன்ரோவில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்த கருத்துக்களைக் கவனிக்கலாம்.

கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடியத் தமிழர் தேசிய அவை ஏற்பாடு செய்த நீதியை நோக்கிய இரவுணவு நிகழ்வில் முக்கிய பேச்சாளராக டெனிஸ் கலந்து கொண்டார்.

இவரின் உரையின் ஆரம்பம் பின்வருமாறு அமைந்தது.

மனித உரிமைகள் பற்றி நான் பேசப்போவதில்லை. போர்க்குற்றம் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றி நான் பேசப்போவதில்லை. இலங்கையில் இன்றும் தொடர்ந்து இடம்பெற்று வரும் இனப்படுகொலை பற்றியே எனது உரை அமையும். நாம் அனைவரும் இனப்படுகொலையை வெளிக்கொணரும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவிச் செயலாளர் நாயகமாக முன்னர் கடமையாற்றிவர் டெனிஸ் ஹாலிடே. டப்ளினைத் தலைமையகமாகக் கொண்ட நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் பிரதான நீதியாளர்களில் இவர் ஒருவர்.

கடந்த மாதம் ஜேர்மனியில் நடைபெற்ற தீர்ப்பாய அமர்வின் பின்னர் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை எனத் தீர்ப்பளித்தவர்களில் பிரதான பங்கு வகித்தவர் டெனிஸ். இலங்கையின் போர்க்குற்றத்தை விசாரிக்க ஜெனிவாவில் சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றை நோக்கி தீர்மானம் வரவுள்ள காலத்தில் அங்கு நடந்தது இனப்படுகொலை என்று மக்கள் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பு சர்வதேசத்தில் நெருக்கடிச் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பின்னணில் இவரது கனடா வருகையும் இனப்படுகொலையை வலியுறுத்தி இவர் ஆற்றிய உரையும் காலத்தின் முக்கியமானதாகவும் ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் கணிக்கப்படுகின்றது.

இனப்படுகொலை என்றால் என்ன என்பதை பின்வரும் அம்சங்கள் ஊடாக டெனிஸ் விளக்கினார்.

- ஒரு குறிப்பிட்ட இனக் குழுமத்தை இலக்கு வைத்துக் கொலை செய்வது.

- தங்கள் தாய் மண்ணில் வாழ்ந்து வந்த தமிழர்களை இது குறிக்கின்றது.




- தமிழ்மக்களது உடலுக்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகள்,

:-சித்திரவதை, பாலியல் வல்லுறவு, காணாமற் போதல், நீதி விசாரணையற்ற கொலைகள், படுகொலைகள், பொது மக்களை இலக்கு வைத்து தாக்குதல் புரிவது.

-ஓர் இனத்தின் உரிமைகளை மறுப்பது. பிறப்பினால் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை அனுபவிக்கத் தடையாக இருப்பது.

-ஓர் இனத்தின் பிள்ளைகளை அவர்கள் குடும்பங்களில் இருந்து பலாத்காரமாக பிரித்து அநாதைகளாக்கி மற்ற இனத்தின் இல்லங்களில் இணைப்பது.

- திட்டமிட்டு ஓர் இனக் குழுமத்திற்கு எதிராக செயற்படுதல்

இவைகளே இனப்படுகொலை என்பதை இனங்காண வைக்கும் அடிப்படைகள்.

தமிழர்களின் வீடுகள், தொழில்நிலையங்கள், குடியிருப்புகள், தோட்டங்கள், மீன்பிடி வளங்கள் மற்றும் குடும்ப உறவு ஆகியவைகளை இல்லாதொழிப்பதும் இனப்படுகொலையே.

அவர்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரிப்பது இனப்படுகொலையின் உச்சம்.

பெண்களுக்குக் கட்டாயக் கருத்தடை செய்தல், அவர்களை பாலியலுக்குப் பலிக்கடாவாக்குதல், மாற்று இனத்தவரிடையே திட்டமிட்டுத் திருமணம் செய்துவைத்தல் என்பவை கூட இனப்படுகொலைதான்.

இறுதிப்போரில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர்.

இது இனப்படுகொலை இல்லாமல் வேறு என்ன?

இப்படியாக விலாவாரியாக இனப்படுகொலைக்கு விளக்கம் கொடுத்த டெனிஸ் ஹாலிடே, கனடியத் தமிழர்களை விளித்து பின்வரும் வேண்டுகோளை நேரடியாக விடுத்தார்.

திறமையான, போதிய அனுபவமுள்ள, நல்ல கல்வி அறிவுள்ள ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளாக நீங்கள் இருக்கிறீர்கள்.....

நீங்கள் உங்கள் தாய் மண்ணான தமிழ் ஈழத்தில் இன்றும் தொடரும் இனப்படுகொலையை சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்த முன்வரவேண்டும்.

நீங்கள் வசிக்கும் நாட்டில் அரசியல்வாதிகளைச் சந்தித்து மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றம் என்பவற்றுக்கு அப்பால் தாய் மண்ணில் நடைபெற்றது, இன்றும் நடைபெறுவது இனப்படுகொலையே என்று வலியுறுத்தி எடுத்துக் கூறுங்கள்...

நிச்சயம் உங்கள் குரலை அவர்கள் செவிமடுப்பார்கள். உங்களால் எதுவும் செய்ய முடியும். இதுவே அவரின் வேண்டுகோளாக அமைந்தது.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலையால் பயிர்ச்செய்கையில் பிரச்சினைகளும் பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் தேவையும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 48-II



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)...

தை, மாசி, பங்குனியில் பல இடங்களில் காளான் மண்ணிலிருந்து முளைத்திருப்பது இங்கே சிறந்த சுட்டியாக கொள்ளலாம். மண்ணில் வாழும் பூஞ்சணம் காலநிலைக்கேற்ப தனது வளர்ச்சியை வித்திகள் உற்பத்தி செய்யும் ஆற்றலை பெருக்கிக் கொள்வது இயல்பு.

ஆனால் சாதகமாக சூழல் ஏற்படும் போது இப் பூஞ்சணங்கள் வெகுண்டெழுந்து பயிர்களை துவம்சம் செய்துவிடுகின்றன. வருகின்ற நோய்களை விரைந்து கட்டுப்படுத்த முடியாதவாறு இவற்றினுடைய விருத்தியிருக்கின்றது.

நாம் முந்திக் கொள்ளமுன் இவை விருத்தியடைந்து விடுவதுதான் வேடிக்கையான விடயமாக இருக்கின்றது. விளைநிலத்தில் இவ்வளவு பிரச்சினையும் இருந்து அதிலிருந்து மீண்டு பின்னர் கிடைத்ததை அறுவடைசெய்த போதும் மழை வந்து அறுவடையான அனைத்தையும் நனைத்து துவம்சம் செய்திருக்கின்றது.

இதுதான் இம்முறை இடைக்காட்டுப் பகுதி வெங்காயச் செய்கையாளர்களுக்கு நடந்திருக்கிறது. இனிவருங்காலத்தில் இம்மாதிரியான பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் நாம் விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். இதற்காக பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் தேவை உணரப்பட்டுள்ளது.

வேளாண்மையில் புத்தாக்கம், பயிற்சி மற்றும் விரிவாக்க மையம் என்பதன் தோற்றுவாய் அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் பல்கலைக்கழக நிபுணர்கள் குழு எமது பீடத்திற்கு வருகை தந்து எமது பல்கலைக்கழகத்துடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக உள்வாங்கப்பட்டது.

இதன் மூலமாக வேளாண்மையில் ஆய்வினையும் வேளாண் தொழில் நுட்பங்களை உருவாக்குதல் மற்றும் அவை சார்ந்த பயிற்சியை வழங்கல் மற்றும் இவற்றுடன் வேளாண் செய்திகளை மக்களுக்கு தெரியப்படுத்தல் போன்றவற்றை செய்வதற்கான தளமாக இன்னும் களமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்வதாக உள்ளது. பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் உருவாக்கம் இப்பிரச்சினைகளுக்கு ஆய்வு ரீதியாக தீர்வுகாண உதவும். இதன் மூலமாக வேளாண்மையில் எமது பிரதேசத்து பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான ஆய்வினை முனைப்படுத்தல்



வெங்காயம் இப்படி அழுகுவதற்கு பூஞ்சணங்களின் தொற்று காரணமாகும்

முக்கியப்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாக விவசாய பீடத்தில் கற்று வெளியேறும் பட்டதாரி மாணவர்களை தொடர்ந்தும் ஆராய்ச்சியிலீடுபட ஊக்குவித்தலும் விவசாயத்தில் ஆராய்ச்சி சார்ந்த மேற்படிப்பிற்கான அடித்தளத்தை எமது பல்கலைக்கழகத்தில் இடுவதும் விவசாயத்தில் புத்தாக்கத்தை உருவாக்க தூண்டுவதும் இன்னும் இங்கிருந்து விவசாயம் சார்ந்த செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக விவசாய பட்டதாரி மாணவர்கள் எத்துறைசார்ந்திருப்பினும் எங்கு பணிபுரியினும் அங்கேயே ஆய்வு செய்வதனை ஊக்குவித்தல் அவசியமாகின்றது. இதன் மூலமாக ஆய்வாளர்களை வளர்த்தெடுக்கும் முனைப்பு முக்கியமாகின்றது. விவசாய பட்டம் பெற்றவர்களை தொடர்ந்தும் இணைத்திருக்கவும் அவர்களின் மூலமாக இணைந்த அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இதன் மூலம் வழிபிறக்கும். மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினது பணிகளிலொன்றாக சமூகத்திற்கான அறிவினை வழங்குதலும் ஒன்றாகும். இதனை பலவாறான செய்தியூடகங்களினூடாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்கள் இன்னும் கல்விசாரா ஊழியர்கள் இணைந்து செய்யலாம். அனைவரினதும் ஒன்றிணைந்த முயற்சி இதற்கெல்லாம் கைகொடுக்கும்.

வெறுமனே விவசாய கற்கைநெறியுடன் விவசாய பீடம் மட்டுப்படுத்தப்படாது எமது நோக்கமான விவசாயத்தை மேம்படுத்தல் விரிவாக்கல், சந்தைப்படுத்தல், பேண்தகு விவசாயம், மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் இன்னும் விவசாய கல்வியை அதன் வளர்ச்சியை உலகத் தரத்திற்கு உயர்த்துதல் என்பதனை செய்கையினால் செய்து காட்டும் நிலைக்குள் நாம் வந் திருக்கின்றோம்.

விவசாய பீடத்தின் சொந்த நிலப்பரப்பினுள் நாம் காலடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில் விவசாய பீடத்தின் மனித வளம் ஆய்வுத்திறன் மற்றும் அதற்கான ஆய்வு கூட வசதிகளை பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருப்பதால் நீண்ட நாள் கனவை நினைவாக்கும் நாளை விரைந்து நாமும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் வரவு இங்கே முக்கியமானது. கொண்ட கொள்கையில் திடமாக இருந்ததனால் பொறியியல் பீடம் முதலாவதாக அறிவியல் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாய பீடமும் பொறியியல் பீடமும் ஒருங்கே கிளிநொச்சியில் அமையவிருப்பது பல்வேறு துறைசார்ந்த கற்கைநெறிகளுக்கும் வழிவகுக்கும். வெளியேறும் பட்டதாரி மாணவர்கள் தனியான தொழிலை ஆரம்பிக்கவும் தொழில் ரீதியாக தொழில் நுட்பத்தை உள்வாங்கி புதிய தொழில்களை உருவாக்கவும் வழிபிறக்கும் என நம்புவோமாக. (முற்றும்)

# சம உரிமையை ஏற்கும் ஜே.வி.பி.

சிங்களவர் மற்றும் தமிழர்களின் சம உரிமைகளை ஏற்றுக் கொள்வதாகவும் தேசிய கீதத்தை தமிழில் பாடுவது தவறில்லை எனவும் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமயத்தை மிதித்து கொண்டு மற்றுமொரு சமயத்தை உயர்ந்தது எனக் கருதும் சமூகத்தை நாங்கள் உருவாக்க போவதில்லை.

நாங்கள் சகல இன மக்களினதும் சம உரிமைகளை ஏற்றுக் கொள்கிறோம். நாட்டில் உள்ள இரண்டு பிரதான மொழிகளின் சம உரிமைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

தேசிய கீதத்தை தமிழில் பாடினால் அதில் என்ன தவறு இருக்கின்றது?. சுந்தர சிறிபரணி என்று சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடும் போது அதனை எப்படி தமிழ் பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள்? அப்போது நாட்டின் மீது எப்படி நேசம் உண்டாகும்?

நாட்டின் ஆட்சியாளர்களுக்கு யுத்தம் இன்றி வாழ முடியாது. நாட்டில் ஏதாவது வடிவத்தில் பிரச்சினைகளை உருவாக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம் என்றார். (எ-11)

# பாடசாலை மாணவர்களுக்கு இரும்புச்சத்து குறைபாடு

இலங்கையில் உள்ள மாணவர்களில் 50 சதவீதமானவர்கள் இரும்புச்சத்து குறைப்பாட்டுடன் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் உணவு உண்பதற்கு உரிய காலநேரம் இல்லாமையே இதற்கான காரணம் என சுகாதார அமைச்சு கண்டுபிடித்துள்ளது.

விசேடமாக தானியம் மற்றும் கீரை வகைகளை அதிகம் உட்கொள்ளாமையால் இரும்புச் சத்து குறைபாடு ஏற்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையை கட்டுப்படுத்த புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

உப்பில் இரும்பு சேர்த்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இரும்புச் சத்து திரவம் விநியோகித்தல் போன்ற திட்டங்களை செயற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (2)

# ஜெனீவா தீர்மானம் நாட்டிற்கோ மக்களுக்கோ எதிரானதல்ல-மங்கள

(கொழும்பு)

ஜெனீவா தீர்மானத்தை அரசாங்கம் மக்களின் கவனத்தை திசை திருப்ப பயன்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊழல் மோசடிகள் மற்றும் அரசாங்கத்தின் இயலாமை போன்றவற்றை மூடி மறைக்கவே இவ்வாறு முயற்சிக்கப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனீவா தீர்மானம் நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ எதிரானதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கோ அல்லது இராணுவத்திற்கோ எதிராக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு சில உயர் அதிகாரிகளுக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கம் புத்தி சாதுரியத்துடன் செயற்படாவிட்டால் அதனால் மக்களே பாதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் இவ்வா றான அழுத்தங்களை நாடு எதிர் நோக்கிய போது சரியான இராஜதந்திர அணுகுமுறைகளை பயன்படுத்தி கடந்த காலத் தலைவர்கள் நாட்டை பாதுகாத்தனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா, கனடா ,நோர்வே ஆகிய நாடுகள் இதேவிதமான தீர்மானமொன்றை முன்வைத்ததாகத் தெரிவித்துள்ளார்.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன ஓர் தொலைபேசி அழைப்பின் மூலம் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வினை எட்டினார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# மகளிர் தினவிழா


(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சனசமூக நிலையக் கட்டடத்தில் கிராம அபிவிருத்திச் சங்க கொட்டடி சனசமூக நிலையம் கலாநிதி நா. தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி பற்குணராஜா யோகேஸ்வரி , சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யூட் , ஜே/83 பதில் கிராம அலுவலர் சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தலையீடே தமிழர்களுக்கான நீதியைத் தடுக்கிறது!



திருமுருகன்

ஈழத்தில் நடந்த இனப்படுகொலைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் மே 17 இயக்கம், சமீபத்தில் சென்னையில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்டது. தொடர்ச்சியாக சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிற மே 17 இயக்கத்தின் தலைவரான திருமுருகனிடம் பேசியபோது...

"ஐ.நாவுக்கான உயரதிகாரியாக பணிசெய்த விஜய் நம்பியார், இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்பதை நாங்கள் ஏற்கெனவே நிரூபித்திருக்கிறோம். 2009 போரின்போது முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழர்களுக்கு உணவும் மருந்தும் அனுப்புவதை இலங்கை அரசு தடுத்து நிறுத்தியது. இது சர்வதேச மனித உரிமைக் குற்றம் அல்லது போர்க்குற்றம்.

இதை உலகுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க ஐ.நாவின் மனிதாபிமான பணிகளுக்கான செயலாளர் ஜான் ஹோல்ம்ஸ் மறுத்தார். இவர் விஜய் நம்பியாருடன் இணைந்துநின்று இலங்கையைக் காத்தார். சர்வதேச சுதந்திர விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ள விதி எண் 99 இன் கீழ் உடனடியாக இலங்கை மீது விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ள ஐ.நா. பரிந்துரை செய்திருந்ததைப் புறக்கணித்து, இலங்கை அரசு தம்மைத் தாமே விசாரிக்கும் என்றார்.

இதுவே இதுநாள்வரை தமிழர்களுக்கான நீதியை தட்டிப்பறித்து நிற்கிறது. இவற்றை அம்பலப்படுத்தவும் விஜய் நம்பியார், ஜான் ஹோல்ம்ஸ் மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவும், இவர்களால் தடுக்கப்பட்டிருக்கும் சர்வதேச விசாரணையை வெளிக்கொணரவும் ஐ.நா. முற்றுகைப் போராட்டத்தினை நடத்துகிறோம். ஐ.நா-வின் ஜெனீவா தலைமை அலுவலகம் முன் தீக்குளித்த முருகதாசன் நினைவுநாளில் வருடந்தோறும் உலகெங்கும் நடத்தப்படும் போராட்டத்தினை, இந்த முறை சென்னை, பெங்களூர், மும்பை, டில்லி, நியூயோர்க், சிட்னி உள்ளிட்ட நகரங்களில் தோழமை அமைப்புடன் இணைந்து நடத்தினோம்"

கேள்வி:-"போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகப்போகிறது. உலக நாடுகளின் மௌனம் இன்னமும் தொடர்கிறதே?"

பதில்:-"இதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இங்கிலாந்தும் சீனாவும்தான் பொறுப்பேற்க வேண்டும். இவர்களது பிராந்திய நலனை முன்னிறுத்தியே நீதியைத் தடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, இந்தியாவின் தலையீடே தமிழர்களுக்கான நீதியைத் தடுக்கிறது. ஏனெனில், விசாரணை தொடங்கும்பட்சத்தில் இந்திய அதிகாரிகளும் இலங்கையுடன் சேர்த்து விசாரிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது."

கேள்வி:-ஐ.நா. அமர்விலாவது இலங்கைக்கு ஏதாவது அழுத்தம் ஏற்படுமா?"

பதில்:-"ஐ.நா-வின் விதிகளைக் கணக்கில் எடுக்காமலும், மனித உரிமை கமிஷனின் பரிந்துரைகளைக் கணக்கில் எடுக்காமலும், மீண்டும் அமெரிக்கா தனது நலனுக்காகவும், இந்தியா தனது விருப்பத்துக்காகவும் தீர்மானங்களை வரையறுத்தால், இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க இயலாது. இதுவரை உலக அளவில் இலங்கை அழுத்தத்தினைப் பெறவில்லை. மாறாக, அது தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டே இருக்கிறது."

கேள்வி:-"ஐ.நா-வின் மனித உரிமை ஆணையர் நவிப்பிள்ளையின் அறிக்கையின் சில பாகங்கள் கசிந்திருக்கும் நிலையில், அதில் என்ன உள்ளது?"

பதில்:-"கடந்த வருட அமெரிக்கத் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை எவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றிய



அவரது குறிப்புகளே வெளியாகி இருக்கிறது. இதில் இலங்கை அரசு எழுப்பிய 72 கேள்விகள் / பரிந்துரைகளில் சிலவற்றினை மட்டும் காண முடிந்தது. அமெரிக்க தீர்மானத்தின்படி, இலங்கை அரசு தனது செயற்பாட்டுமுறைகளை மாற்றி, சட்டதிட்டங்களை புதிதாக எழுப்பி, சர்வதேச உதவியுடன் ஜனநாயக நாடாக மாற வேண்டும் என்கிற வழிமுறைகளையும் தமிழர்களுடன் நல்லிணக்கமாகச் சென்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் இருவரும் வாழ இலங்கை வழிவகை செய்வதற்கான வழிமுறைகளையும் பற்றி பேசியிருக்கிறது.

கேள்வி:-"ஆக மொத்தம் நவிப்பிள்ளையின் இலங்கைப் பயணமும் அறிக்கையும் ஏமாற்றம் தானா?"

பதில்:-"நவிப்பிள்ளை மனித உரிமை ஆணையராக கலந்து கொள்ளும் இறுதி ஐ.நா. அமர்வு இதுதான், ஆகவே, அவர் இலங்கை அரசு மீது போர்க்குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்குப் பரிந்துரைக்க வேண்டும். ஆனால், அவரது இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கை ஏமாற்றம் அளிக்கிறது. இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டினை யாரும் என்னிடம் சொல்லவில்லை என்று அவர் சில தமிழர் தரப்பு பிரதிநிதிகளிடம் சொல்லியிருக்கிறார்."

கேள்வி:-"தாங்கள் நடத்திய இனப்படுகொலையைத் தாங்களே விசாரிக்க அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதா? அந்தக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த 2017 வரை கால அவகாசம் கேட்டுள்ளதே இலங்கை?"

பதில்:-"ஐ.நாவின் நிபுணர் குழு, ஐ.நா-வின் மனித உரிமை கமிஷன், மனித உரிமை அமை



விஜய் நம்பியார்

ப்புகளான அம்னெஸ்டி, மனித உரிமை கண்காணிப்பகம் போன்றவை மற்றும் உலகின் சிறந்த மனித உரிமை கண்காணிப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியல் அறிஞர்கள் ஆகியோர் இதை நிராகரித்து இருக்கிறார்கள். காலநீட்டிப்பு கேட்பதன் மூலம் வடக்கு கிழக்குப் பகுதியினை முழுமையாக ஆக்கிரமிப்பதும் தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் நிகழும் ஈழவிடுதலை ஆதரவு போராட்டங்களை சோர்வடையச் செய்வதற்குமான உத்திதான் அது."

கேள்வி:-"வட மாகாணத்தில் ஆட்சி அமைத்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சியை எப்படி பார்க்கிறீர்கள். அதனால், மக்களுக்கு ஆதாயம் ஏதும் உண்டா?"

பதில்:-"1987-ல் தமிழர்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியல் தீர்வு இது. புலிகள் மட்டுமல்ல... இந்திய இராணுவத்தின் துணையுடன் அங்கே முதல்வராக இருந்த வரதராச பெருமாளே இது தீர்வல்ல என்று புறக்கணித்திருக்கிறார். இதன்மூலம் தமிழர்களுக்கு எந்த குறைந்தபட்ச நன்மையும் வந்துவிடப்போவது இல்லை."

ஜூனியர் விகடன்

# நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு தகவல்கள் கிடைத்தது எவ்வாறு?

## கேள்வி எழுப்புகிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு எங்கிருந்து தகவல்கள் கிடைத்தன என அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கை தொடர்பில் நவநீதம்பிள்ளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்துள்ளார்.

இலங்கை தொடர்பான நவநீதம்பிள்ளையின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அமைச்சர் பீரிஸ் இந்த சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார். சில நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பிலான முன்கூட்டியே தீர்ப்புக்கள், தண்டனை விதிக்கும் நோக்கிலான நகர்வுகள் நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களை மோசமாக பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில நாடுகளின் அரசியல் சக்திகள் தேர்தல் வெற்றிக்காக இலங்கையை உதைபந்தாக பயன்படுத்தி வருகின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் முனைப்புக்கள் குறித்து அமைச்சர் பீரிஸ், நவநீதம்பிள்ளைக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வலயங்களில் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை எனவும், அதன் தரவு உள்ளடக்கங்கள் பிழையானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பான முறையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நவநீதம்பிள்ளையின் அறிக்கையான ஒருபக்கச்சார்பானதும், அரசியல் ரீதியான நோக்கங்களைக் கொண்டதுமாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிக்கையில் இலங்கையின் [illegible] என அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஜெனீவா -அமெரிக்க தீர்மானம் சிலருக்கு ஏமாற்றத்தை கொடுக்கும்

## சபையில் அஸ்வர் எம்.பி.கிண்டல்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பி. ஏ.எச்.எம் அஸ்வர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பும், ஐ.தே.க.வும் இலங்கைக்கு எதிராக முன்னெடுத்த சகல விதமான எத்தனங்களும் தோல்வியில் முடிந்துள்ளதால் இவர்கள் தொடர்பில் கவலையடைவதாக அவர் குறிப்பிட்டார். காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் நவரட்ன மீதான அனுதாபப் பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், கரு ணாநிதிக்கும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகிறது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய சக்திகளோடு இணைந்து எதிர்க்கட்சியினர் பல சதி முயற்சிகளில் ஈடுபட்டாலும் ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் பிரேரணையானது இவர்களின் எதிர்பார்ப்புகளை ஈடேறச் செய்யவில்லை.

என்னதான் இவர்கள் முயன்ற போதும் ஏமாற்றமே இவர்களுக்கு கிட்டியிருக்கிறது என்றும் மேலும் கிண்டலாகத் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி கல்வி நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த மாநாடு

## ஏப்ரலில் நடத்த முடிபு

30 வருட யுத்தத்தின் பின்னர் வட பகுதியில் ஏற்பட்டுள்ள கல்வி நடவடிக்கைகளின் பாரிய மாற்றங்கள தொடர்பாக கல்வி மாநாடொன்று யாழ். நகரில் நடத்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் குறித்த மாநாட்டை நடத்துவது என நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் முடிவு செயயப்பட்டுள்ளது.

முதல் தடவையாக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் வட மாகாண பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட கல்விமான்கள் கலந்துகொண்ட கூட்டமொன்று கல்வ் அமைச்சில் அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தற்போதுள்ள கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும, எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், ஏற்பட்டுள்ள சிக்கல்கள், பிரச்சினைகள் என்பவை பற்றியும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

இம் மாநாட்டில் உயர் கல்வி அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, தொழிற் பயிற்சி அமைச்சு போன்றவற்றையும் இணைத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. செல்வராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. சர்வேஸவரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (2)

# அங்கீகரிக்கப்படாத பெயர்களுக்கு முன் வழங்கப்படும் பட்டங்களை நீக்குக

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான கல்வி நிறுவனங்களால் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களால் வழங்கப்படாத பட்டங்கள் பாராளுமன்ற ஆவண ங்களில் சில எம். பி.க்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்படுவதை நீக்குவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐ.தே. கட்சி யின் களுத்துறை மாவட்ட எம்.பி.யான அஜித் பீ. பெரேரா சபையில் சபாநாயகர் சமல் ராஜபக் ஷவிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய போதே அஜித் பீ. பெரேரா இந்த விடயத்தை குறிப்பிட்டார். தேசமான்ய தேசபந்து லங்காபு த்ர, கலாநிதி மற்றும் ஸ்ரீலங்கா ஜனரஞ்சன போன்ற பட்டங்கள் ஜனாதிபதியானாலேயே வழங்கப்படுவதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழ கங்கள் மற்றும் தேசிய சர்வதேச சட்ட ரீதியான கல்வி நிறுவனங்களால் வழங்கப்படாத பட்டங்கள் பாராளுமன்ற ஆவணங்க ளில் எம்பி.க்கள் சிலரின் பெயர்களுக்கு முன்னால் பயன்படுத்தப்படுவதாகவும் இவற்றை நீக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஜித் பீ. பெரேரா இதன்போது தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக பேசிய சபா நாயகர் சமல் ராஜபக்ஷ அப்படி என்றால் அவை தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கும் என்றும் அதன் பின்னர் அது பற்றி பார்ப்போம் என்றும் தெரிவித்தார். (2)

# நிர்வாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுச்சங்கம் நடத்தும் நிர் வாகக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு மல் லாகம் வலி வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் அனைத்து நிர் வாக உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### அருமைராஜா அப்பாத்துரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைராஜா அப்பாத்துரை கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பஞ்சலிங்கம் மயூரன்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் மயூரன் கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home ,8911, Woodbine Ave, Markham ,ON L3R 5G1 ,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சண்முகநாதன் புஸ்பவதி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் புஸ்பவதி கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு Oshwal House ,1 Campbell Rd, Croydon ,Greater London CRO 2SQ ,Uk என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி முருகேசு சின்னத்தங்கம்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னத்தங்கம் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Brampton Crematorium And Visitation Centre Inc , 30 Bramwin Court ,Brampton ON ,Canada என்னும்முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னம்பலம் புனிதவதி

விசுவர் வளவு சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் புனிதவதி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு Chapel Ridge Funeral Home ,8911, Woodbine Ave ,Markham , ON L3R 5G1 ,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கணபதிப்பிள்ளை ராசையா

இருபாலை வேளாந்தோப்பைப் பிறப்பிடமாகவும் 48, செங்குந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ராசையா கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# வேடம் தாங்கி குறும்பட வெளியீடு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு முகிலனின் எட்டாவது குறும்படமாகிய வேடம் தாங்கி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கே.கே.எஸ் வீதியிலுள்ள கரிகணன் தனியார் நிறுவனத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் உதவித்தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2-9)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டாம்

## த.தே.கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)


இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டாம் என இந்தியாவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில், அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா வலுவிழக்கச் செய்யக் கூடாது என வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தை எவ்வாறு கடுமையாக்குவது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வருவதாக பாதுகாப்பு மற்றும் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட பிரதிநிதிகள் விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்து, தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டாம் என கோரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக வலுவாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அதிகாரிகளுக்கு மேலதிகமாக, இலங்கைக்கான வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து தீர்மானத்தை வலுவடையச் செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ,திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)



கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் வாசிப்பு திறன் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபருமாகிய இ. ஓங்காரமூர்த்தி மேற்படி நூல்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம் - மானிப்பாய் செய்தியாளர்)

# சர்வதேச மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழ ங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் "சர்வதேச மகளிர் தின விழா" இன்று பிற்பகல் 2 மணிக்கு சமாச அலுவலகத்தில் யாழ். மா.சி.க. கூ. சமாசத்தின் மகளிர் குழுத்தலைவி திருமதி ஜெபமணி ஜோசவ் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டு றவு சபையின் மகளிர் குழுத் தலைவி திருமதி இ.இராசமணி, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான திருமதி ஆ.தவமலர், திருமதி ச.தீபா, யாழ். கூட்டுறவு சபை செயலாளர் திருமதி வே செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை போற்றும் பெண்களாய் மாறுவோம்

'எந்தவொரு சமுதாயமோ குழுவோ அல்லது தனிநபரோ தமது துன்பங்கள் விடுதலை பெறவேண்டுமாயின் அவர்களை அடக்கி ஆள்பவர்களின் கருணையினால் விடுதலையைப் பெற்று விடமுடியாது என்பதை இங்கு வந்திருக்கும் பெண்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆண்களின் கருணையால் பெண்கள் ஒருபோதும் தமது உரிமைகளைப் போராடி பல த்தைக் காட்டி நிர்ப்பந்தித்தால் மட்டுமே வெற்றியடைய முடியும்'
- ஜவகர்லால் நேரு -

ஒரு பெண் தலைவியாக இருந்து கொண்டு வேலை செய்வது அத்தனை சுலபமான விடயமல்ல. காரணம் தலைமை ஒரு பெண்ணாக இருக்கின்ற போது பணியாளர்களின் ஆதரவு அல்லது ஒத்துழைப்பு என்பது பூச்சியமாகி விடுகின்றது.

பொதுவாக ஒரு பெண்ணின் தலைமையின் கீழ் பணிபுரிய பெண்களே விரும்புவதில்லை. வேறு வழியில்லாமல் வேலையில் சேர்ந்து விடும் பெண்களும் அவர்களுடைய ஈகோ காரணமாக பெண்ணின் தலைமையின் கீழ் வேலை செய்வதில்லை. இவளும் நம்மைப்போல ஒரு பெண்தானே இவள் என்ன சொல்வது நாம் என்ன கேட்பது என்று எத்தனையோ உணர்வுக் கோளாறுகள், உளவியல் பிரச்சினைகள், மாற்றுக் கருத்துக்கள்.

பொதுவாகவே பெண்கள் தமது புற அழகு குறித்து அதிக சிந்தனை உடையவர்களாகவும் உடை, நகை மற்றும் ஆடம்பரப் பொருட்கள் மட்டில் அதிக ஆர்வம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். அவை அனைத்துமே அவர்கள் தங்களுக்குத் தாங்களே போட்டுக் கொள்ளும் விலங்குகள் என்பது தெரியாமல் வாழ்கின்றார்கள்.

பெண்கள் பிற பெண்களை அழகின் அடிப்படையிலேயே எடைபோடுவதும் திறமையான ஏனைய பெண்களின் சாதனைகளுக்கு அவர்களே தரக்குறைவாக காரணங்களைக் கூறி விமர்சிப்பதும் நம்மிடையே நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

## சர்வதேச மகளிர் தினம் இன்று

பெண்களின் சம்பாதிக்கும் திறன் அவர்களது குரல்கள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் கேட்கப்படவும் அங்கீகரிக்கப்படவும் வழி ஏற்படுத்தியுள்ளது.

அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் அருமையான வாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது. ஆண்களுக்கு பெண்கள் சரிசமம் என்ற நிலை மாறி பெண்களுக்கு ஆண்கள் சரிசமம் என்ற நிலை உருவாக ஆரம்பித்துள்ளது.

**இனி வரும் காலம் பெண்களுக்கானது...**

குறிப்பாக பெண்களுக்கு இக்காலம் முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில்தான் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.

மனம் போன போக்கில் வாழ்வது...

யார் எப்படிப் போனால் எமக்கென்ன என்று ஒரு துளியும் சமூக அக்கறை இல்லாது நமக்குத் தோன்றுவதை எல்லாம் செய்வது...

பணம் மட்டுமே போதும் உறவுகள் தேவையில்லை என்ற எண்ணம்...

மது அருந்துவது, புகை பிடிப்பது...

மற்றவர்களின் உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் உடை அணிவது...

ஆண்களிடமிருந்து முன்னுரிமைகளையும் சலுகைகளையும் பெறுவது...

இவைதான் சுதந்திரம் என்று எண்ணியிருந்தால் தயவு செய்து பெண்கள் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது...

அதேபோல கட்டுப்பாடு என்பது நம்மை அடிமைப்படுத்துவது என்பது பொருளல்ல. கட்டுப்பாடு என்பது நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் ஒரு சங்கிலி. அது இல்லாவிட்டால் யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை உருவாகிவிடும்.



ஆண், பெண் இருபாலாருக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். கட்டுப்பாடுகள் நம்மை நெறிப்படுத்தி நாம் சரியான பாதையில் செல்ல உதவும். எனவே கட்டுப்பாடுகளை அலட்சியம் செய்யாமல் நமக்கு நாமே கட்டுப்பாடுகளை வைத்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தம்மை பலவீனப்படுத்தும், பலவீனமாக காட்டும் எந்தவொரு சந்தர்ப்பங்களுக்கும் இடம் கொடுக்காமல் தமது ஆத்மீக பலத்தை வெளிப்படுத்தி தமது சுதந்திரத்தை தாமே அனுபவிக்க முன்வர வேண்டும். அதற்கு மிகச்சிறந்த வழி பெண்கள் பெண்களை தமது தலைவர்களாக முழு மனதுடன் ஏற்கவும் பின்பற்றவும் வேண்டும்.

ஏனெனில் பெண்ணாலேயே பெண்ணை முழுமையாக விளங்கிக் கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் முடியும். எனவே பெண்களே! பெண்களை புரிந்து கொள்ளுங்கள். ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றே உலகம் உங்கள் வசமாகும்.

**த.யூலி தயான்**

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமுதம் தடவிய நஞ்சு - வைகோ

(சென்னை)

**இலங்கைக்கு எதிராக, ஐ.நா. மனிதவுரிமை அமைப்பில், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட ஐந்து நாடுகள் முன்வைக்கும் தீர்மானம் அமுதம் தடவிய நஞ்சு என்றும், அது இலங்கை அரசை பாதுகாக்க மறைமுக ஏற்பாடு என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் கள நிலைமையை ஆய்வு செய்து தந்த அறிக்கையில் சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணை நடைபெற்றால்தான் நீதிக்கு வழி கிடைக்கும் என அறிக்கை தந்தார்.

உலகத்தின் மனசாட்சி மெல்ல மெல்ல விழித்துக்கொண்டுவிட்டது என நாம் கருதினோம். யாழ்ப்பாணம் சென்ற பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கூற்று அந்த நம்பிக்கையைச் சற்று வளர்த்தது.

இப்போது ஜெனீவாவில் மனிதவுரிமை கவுன்சில் கூட்டம் தொடங்கிவிட்டது.

முருகதாசன் தீக்குளித்து மடிந்த ஜெனீவா திடலில் மார்ச் 10 ஆம் திகதி இலட்சக் கணக்கான தமிழர்கள் சங்கமித்து நீதி கேட்டு எழுப்பும் சத்தியத்தின் ஆவேசக் குரல் மனிதவுரிமை கவுன்சிலின் செவிகளில் ஒலிக்கும். நீதிக்கான கதவு திறக்கும் என நம்பினோம்.

அமெரிக்கா, பிரித்தானியம், மாண்டிநிரோ, மாசிடோனியா, மொரீசியா ஆகிய ஐந்து நாடுகள் மனிதவுரிமை கவுன்சிலில் மார்ச் 3 ஆம் திகதி ஒரு தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன. அமெரிக்க அரசு முன்நின்று தயாரித்துள்ள இத்தீர்மானம் மிகவும் வஞ்சகமானது. வரிக்கு வரி திரும்பத் திரும்பப் படித்து அதிர்ச்சியுற்றேன்.

பயங்கரவாதத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்ற சொற்களின் பின்னால் கொடூரமான இலங்கை அரச பயங்கரவாதத்தை மறைத்துவிட்டு, தாயக விடுதலைக்காக உலகெங்கும் பல தேசிய இனங்கள் ஆயுதம் ஏந்திய வழியில் சமர்க்களத்தில் போராடிய விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்தும் நோக்கம் நன்கு தெரிகிறது.

2020 ஆம் ஆண்டில் சிங்கள தேசத்தில் வேறு இனம் என்ற அடையாளமோ, பேச்சோ இருக்கக்கூடாது என்று ராஜபக்ஷ சகோதரர்கள் ஊளையிட்ட கருத்தை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இத்தீர்மானத்தில் தொடக்கத்தில் ஒரு இடத்தில் இனம் என்ற சொல்லைத் தவிர்த்து தீர்மானம் நெடிகிலும் தமிழ் தேசிய இனம் என்பது முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற சிறுபான்மை மக்கள் என்றே கூறப்பட்டுள்ளது. இதில் திட்டமிட்ட உள்நோக்கம் தெரிகிறது.

கொலைகார இலங்கை அரசு நியமித்த எல்.எல்.ஆர்.சி. எனும் மோசடி பித்தலாட்ட ஆணையத்தை பல இடங்களில் இத்தீர்மானம் பாராட்டுகிறது. இலங்கையில் நல்லிணக்கத்துக்கான ஆக்கபூர்வமான வேலைகளை ஆணையம் செய்துவிட்டதாக மெச்சவும் செய்கிறது. இந்த ஆணையத்தின் சில பரிந்துரைகளை இன்னும் அரசு நிறைவேற்றவில்லை என்று குறிப்பிட்டு, மேல் பூச்சு ஏமாற்று வேலையை தீர்மானம் செய்கிறது.

உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட என்று கூறிக் கொண்டு இலங்கை அரசு அமைத்த ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையாக தோல்வியடைந்து விட்டதால், சுதந்திரமான நம்பகத் தகுந்த சர்வதேச விசாரணை வேண்டும் என்று மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தந்த அறிக்கையை ஒரு பக்கத்தில் கூறிக்கொண்டே, இலங்கை அரசே அப்படி ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்றும், அதில் நீதி கிடைக்காவிடில் அனைத்து நாடுகள் விசாரணை குறித்த நவநீதம்பிள்ளை பரிந்துரையை வரவேற்பதாகவும் முன்னுக்குப் பின் முரணாக இத்தீர்மானம் கூறுகிறது.



இலங்கையில் தமிழர் தாயகத்தில் தற்போது வேகமாக சிங்களக் குடியேற்றங்கள் நடக்கின்றன. தமிழ் ஈழம் சிங்கள இராணுவத்தின் பிடியில் நசுங்குண்டு விம்முகிறது. தமிழ் பெண்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள விபரீத நிலைமையை நினைக்கவே மனம் நடுங்குகிறது. ஈழத்தமிழருக்கு நீதியும் தீர்வும் ஒன்றே ஒன்றுதான்.

சிங்களக் குடியேற்றங்களும் சிங்கள இராணுவமும் தமிழர் தாயகத்திலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டு ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஐ.நா.மன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

உக்ரைன் நாட்டின் கிரிமியா பகுதியில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக ரஷ்யாவின் இராணுவத்தை செலுத்துவேன், கிரிமியா ரஷ்யாவோடு இணைய பொது வாக்கெடுப்பு கோருவேன் என முண்டா தட்டும் ரஷ்யா ஐ.நா.வின் பாதுகாப்புக்குழு உறுப்பினர் நாடு. இங்கிலாந்து நாட்டில் அனைத்து உரிமைகளோடும் வாழும் ஸ்கொட்லாந்து மக்கள் தனிநாடாகப் போவதற்கு இதோ பொது வாக்கெடுப்பு நடக்கப் போகிறது.

உலகில் தமிழனுக்கு மட்டும் ஏன் நீதியில்லை. நாதியற்றுப் போனோமா நாங்கள்? தரணியில் தமிழருக்கு ஈழ தேசம் மலரவும் வெகுண்டு எழவேண்டிய கடமையைச் செய்ய சபதம் ஏற்போம்.

ஜெனீவா மனித உரிமை கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரசுகள் ஈழத் தமிழர்களுக்கு வஞ்சகம் செய்யாமல், சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவும், சுதந்திரத் தமிழ் ஈழக் கோரிக்கையை அங்கீகரிக்கவுமான விதத்தில் மனிதவுரிமை கவுன்சிலில் தீர்மானம் கொண்டுவர வேண்டும்.

அமுதம் தடவிய நஞ்சாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அமெரிக்க தீர்மானத்தின் ஊடாக புதைந்துள்ள நச்சுத் தன்மையை நீக்கி நீதிக்கான தீர்மானத்தை நிறைவேற்றவும் மனிதவுரிமை கவுன்சிலின் உறுப்பினர் நாடுகள் முன்வரவேண்டும். கரிய இரவு நீடித்துக்கொண்டே போக முடியாது. விடியல் என்பது நியதி. அதுபோலவே, ஈழத் தமிழர்களுக்கும் நீதியைப் பெற்றுத் தரும் வரை உறுதிகொண்டு தொடர்ந்து போராட தமிழ்க் குலத்தின் இளைய தலைமுறையை வேண்டுகிறேன் என்று கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> உலகில் எந்த ஒரு விடயமும் காரணமின்றித் தோன்றுவதில்லை.
> – ஸ்டோவ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேர்மையில்லாத இந்திய மத்திய அரசு தான் விதைத்ததை விரைவில் அறுக்கும்

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்ற கோஷங்கள்–கோரிக்கைகள் வலுவாக குறைந்து விட்டன.

கடந்த தடவை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்திய தேசம் முழுவதிலும் ஏற்பட்டிருந்தது.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் இந்தக் கோஷம் பலமாக இருந்தது.

ஆனால் இம்முறை அப்படியாக கோஷங்கள் எதுவும் எழவில்லை. இதற்குக் காரணம் கடந்த தடவை ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்த இந்தியா, இந்தத் தடவையும் ஆதரிக்கும் என்பதனால் அல்ல.

மாறாக எதிர்வரும் மாதங்களில் இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தியப் பொதுத் தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சி வீடு செல்வதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில் ஜெனிவாத் தீர்மானத்தை தாமாகவே முன்வந்து இந்தியா ஆதரிக்கும் என்பது தெளிவு.

ஜெனிவாத் தீர்மானத்தில் திருத்தங்கள் செய்ய முற்பட்டால், அல்லது அதனை ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்தால் தமிழகத்தில் ஒரு ஆசனத்தையேனும் ஆளும் காங்கிரஸால் பெற முடியாமல் போகும்.

இதன் காரணமாக எவரும் கேட்காத நிலையிலும் இந்திய மத்திய அரசு இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிக்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் மியன்மாரில் சந்தித்துப் பேச்சு நடத்திய போது, அது தொடர்பில் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தாலும்,

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் இந்தியாவின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை எனக் கூறியிருந்தார். இதன் பொருள் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிப்பது என்பதேயாகும்.

கடந்த முறை இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து இந்திய மத்திய அரசு முடிவு எடுப்பதில் பெரும் குழப்பத்தை சந்தித்தது.

அதிலும் இந்திய வெளியுறவு அமைச்சர் குர்ஷித் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிக்கும் மனநிலையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் இந்தியா என்ன முடிவெடுக்கும் என்பதை ஜெனிவாத் தீர்மானத்துக்கான வாக்கெடுப்பின் முதல்நாள் வரை அறிய முடியாதிருந்தது.

ஆனால் இது இந்திய தேர்தல் காலம் என்பதால் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரிப்பது என்ற தனது முடிவை இந்தியா இப்போதே வெளிப்படுத்தியுள்ளது.

கெஞ்சினால் மிஞ்சுவது மிஞ்சினால் கெஞ்சுவது என்ற நிலைமை இந்திய மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எதுவாயினும் இவ்விடத்தில் ஒன்றை மட்டும் கூறமுடியும். அதாவது ஜெனிவாத் தீர்மானத்தை தானாக முன்வந்து ஆதரிப்பது என்ற முடிவை இந்திய காங்கிரஸ் அரசு எடுத்த வேளையில்,

நடக்கும் பொதுத் தேர்தலோடு ஆட்சி அவுட் என்ற முடிவு எழுதப்பட்டு விட்டது.

ஆக, நீதியோடு நேர்மையோடு நடந்து கொள்ளாத இந்திய மத்திய அரசு ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தும் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை என்ற உண்மையும்,

ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்ததால், கூடியிருந்த இலங்கை அரசும் இப்போது பகை என்ற முடிவும் மிக விரைவில் காங்கிரஸுக்கு கிடைக்கும்.

ஆம்! அங்கும் பாடி இங்கும் பாடி எதிலும் நேர்மை இல்லாதவர்களின் முடிவு இவ்வாறு அமைவது உலக நியதியாயிற்று. என்ன செய்வது!

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குழி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன்வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, ஸ்ரீலங்கா ரெலிகொம், பிரதம தபாலகம், நீதிமன்ற வளாகப் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், யாழ் நூலகம், சத்திரச் சந்தியில் ஒரு பகுதி, வேம்படி 1-ம் குறுக்கு, யாழ் பிரதான வீதி ஒரு பகுதி, 2-ம், 3-ம் குறுக்கு, விஜிதா கபே, சிறைச்சாலைப் பிரதேசம், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மேற்கு, குரும்பைசிட்டி, அச்செழு, ஈவினை, வாகையடி, மயிலங்காடு, சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து சுன்னாகம் சந்தி வரையான பிரதேசம், சூராவத்தை, மலப்பை, மயிலங்காடு, ஏழாலை, குப்பிளான், கட்டுவன் ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை தலங்காவில், பலாலி வீதி, கந்தர்மடம், ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், இராசாவின்தோட்டம், ஆனைப்பந்தி சந்தி, இலுப்பையடி சந்தி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுகோபுர வீதிகளின் ஒரு பகுதி, பரமேஸ்வரா சந்தி ஆகிய இடங்களிலும மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (செ-11)

## யோகாசனக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கம் நடத்தும் யோகாசனக் கருத்தரங்கு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று 8-ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நா.நவராஜ் **ஆளுமை வளர்ச்சியும் யோகாவும்** என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். இன்றைய தினம் புதிய யோகா பயிற்சிக்கான பதிவுகளும் இடம்பெறும் என யாழ்.யோகா இயக்குநர் எஸ்.உமாசுதன் அறிவித்துள்ளார். (செ)

## குரலிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் நடத்தும் குரலிசைப் பயிற்சி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 வரை இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் உள்ள சிந்மய ஞானவேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் குரலிசை பயிற்சியை குரலிசை நிபுணரும் இசைக் கலைமணியுமான வர்ண ராமேஸ்வரன் வழங்கவுள்ளார். (2)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவுச் சங்கத்தின் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது தலைவராக சே.இராசவல்லவன், உப தலைவராக ந.சண்முகவேல், செயலாளராக ப.மகேந்திரதாசன், உபசெயலாளராக சீ.நடேசு, பொருளாளராக பொ.கமலநாதன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.ஜெயராஜர், ச.தில்லைநாதன், கணக்காய்வாளராக செ.ஆனந்தகுமாரதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (2)

## சைவசமய பரிசில் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் சைவசமய பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன், ஓய்வுநிலை அதிபர்களான த.கந்தையா, திருமதி சா.நகுலேஸ்வரன், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் ல.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க முகாமையாளர் செ.மகேஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஷ், முறைசாராக் கல்வி ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் தா.பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-9-29)

## கவிதை நூல் அறிமுக விழா

(மானிப்பாய்)

ஆழியான் எழுதிய கருநாக்கு எனும் கவிதை நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி கேணியடியிலுள்ள தூண்டி அமைப்பில் இடம்பெறவுள்ளது.

மதிசூதனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நூலின் ஆய்வுரைகளை சு.குணேஸ்வரன், சி.ரமேஷ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (2-9-23)

## நல்லூர் பிரதேச செயலக பிரிவுச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுச் சங்க பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ம.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இதற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் என்.எஸ். ஆர். சிவரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் சங்க பிரதிநிதிகளும் பான் ஏசியா வங்கியின் பிரதிநிதிகளும் அமானா தகாபுள் காப்புறுதி நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியம் பெறும் அனைவரும் இப்பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**சமுதாயத்திலிருந்து விடுதலை**

நாம் அனைவருமே நிச்சயமாக நம்மை மகிழ்ச்சியடையச் செய்யும் வாழ்க்கையை நடத்த விரும்புகிறோம். அதேசமயம் இது நிச்சயமாக மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்யும்.

இந்தச் சமுதாயத்தின் அனைத்து நிபந்தனைகளிலிருந்தும் வெளிவராவிட்டால் (சமுதாயத்திடமிருந்தே விடுதலை அல்ல) நாம் அவற்றுக்கு அடிமைகளாகி விடுவோம். இதனை நம்மால் வெளிக்காட்டிக் கொள்ளமுடிவதில்லை. நமது வாழ்வு நமது கொள்கைகளை விட்டுக்கொடுத்துப்போகிற ஒரு போலியான வாழ்வாகவே இருக்கும் சமுதாய நிபந்தனைகளிலிருந்து வெளிப்பட்டுவிட்டால் ஒரு சிறந்த உலகத்தினை உருவாக்க நமது இதயம் தங்குதடையின்றி தன்னை வெளிப்படுத்த இயலும். இன்று நல்ல காரியங்களைச் செய்யக்கூடி பயப்படுகிறோம். ஏனென்றால் சமுதாயத்தில் நமது பெயருக்குப் பாதகம் வந்து விடுமோ என்ற பயத்தினால்தான். இத்தகையதொரு வாழ்க்கை ஒரு முடிவுக்கு வரும் நமக்குச் சரியானதென்று நாம் எண்ணுவதை நாம் செய்தாக வேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பொறுமையைக் கடைப்பிடி



- வாழ்வில் மேல் நோக்கி உயர்த்துவது அனைத்தும் நன்மை. முன்னேற்றத்தை தடுத்து கீழே தள்ளி வீழ்ச்சிக்கு உள்ளாக்குவது தீமை.
- நல்லொழுக்கம் என்பதில் சிறிதளவும் சுயநலம் இருப்பது கூடாது. எந்நிலையிலும் பொதுநலத்துடன் இருக்கப் பழகுங்கள்.
- இறைவனே ஏழையின் வடிவில் நம் முன் நிற்கிறான். அந்த ஏழையின் துன்பம் துடைப்பது நம் அனைவரின் கடமை.
- இறந்த உடலில் உயிர் மீண்டும் புகுவதில்லை. அதுபோல, இறந்த காலமும் மீண்டும் வரப்போவதுஇல்லை. நிகழ்காலமான இன்று வாழ்வதே முக்கியம்.
- பூமிதேவியைப் போல பொறுமையைக் கடைப்பிடியுங்கள். பொறுமையுடன் இருப்பவன் காலடியில் உலகமே கிடக்கும்.
- ஒற்றுமையுடன் இணைந்து பாடுபட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லதம்பி ஞாபகார்த்த உதைபந்து; நாவாந்துறை சென்.மேரிஸ் சம்பியன்

சுன்னாகம் நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடத்திய அணிக்கு 5 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இவ்விறுதிப் போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 5:1 என்னும் கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

போட்டியின் சிறந்த வீரராக நாவாந்துறை சென்.மேரிஸ் அணியின் வீரன் யூட் தெரிவானார். (க-23)










## சதுரங்கப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

வருடாந்த விளையாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு கிருபா லேணர்ஸ் இன் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறிக்ட் கழகம் நடத்தும் மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அனைத்துப் பிரிவு அணியினருக்குமான சதுரங்கப் போட்டியும் திறந்த போட்டியும் இடம் பெறவுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதோடு முதல் 10 இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். அனுமதிக் கட்டணம் இருநூறு ரூபா ஆகும்.

போட்டி தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஆர்.நிருஜன் 077 1738095 தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

விளையாட்டுச் செய்திகள்

## சதுரங்கப் போட்டி முன்னேற்பாட்டு கலந்துரையாடல்

ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்பட்ட ஆளுநர் கிண்ண சதுரங்க போட்டியின் இறுதிப் போட்டி (மாகாண மட்ட போட்டி) எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

அதன் முன்னேற்பாடாக அப் போட்டியில் பங்கு பெறும் மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

போட்டி தொடர்பான விபரங்களையும் விதிமுறைகளையும் பற்றி தெளிவுபடுத்தவுள்ளதால் அனைத்துப் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (கு)

# தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்து; குருநகர் பாடுமீன் சம்பியன்



யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. இவ்விறுதிப் போட்டி அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப் போட்டியில் பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் பலவற்றை தவறவிட்டன. இரு அணிகளும் மாறி மாறி எதிரணி களின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல் பெறமுடியவில்லை.

இறுதியில் போட்டி நேர நிறைவில் 0:0 என இரு அணிகளும் இருந்தமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டு வெற்றி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 6:5 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கி டையிலான தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனாகியது. (க-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் சொ.பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி பொ.சிவானந்தராஜா, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா, தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.லோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு)

# நல்லூர் பி.இளைஞர் கழக கூடைப்பந்தாட்ட போட்டி

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகளின் கூடைப்பந்தாட்ட போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இடம்பெற்ற ஆண்களுக்கான இக் கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் இளைஞர் கழக அணியும் நல்லூர் பிரதேச இளைஞர் கழக தெரிவு அணியும் மோதியது.

இப் போட்டியில் 68:58 என்னும் புள்ளிகள் அடிப்படையில் நல்லூர் பிரதேச இளைஞர் தெரிவு அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி இளைஞர் கழக அணியும் யாழ் இந்து மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணியும் மோதியது.

இதில் 28:21 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ் இந்து மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணி வெற்றியீட்டியது.

தொடர்ந்து மாவட்ட மட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளன.(க-23)





யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின் போது விருந்தினர்கள் ஆலயத்திலிருந்து பாண்ட் வாத்திய சகிதம் மைதானத்தை நோக்கி அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண கிரிக்கெட்

## பாகிஸ்தான் - இலங்கை இன்று பலப்பரீட்சை

5 அணிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்று வரும் ஆசிய கிண்ணத் தொடருக்கான இறுதிப்போட்டி இன்று நடைபெறுகிறது.

இவ் இறுதிப் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

மிர்பூரில் நடைபெறும் இப்போட்டி இலங்கை நேரப்படி பி.ப 1.30க்கு நடைபெறவுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 5 அணிகளின் பங்குபற்றலோடு 12-வது ஆசிய கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் லீக் போட்டிகளின் நிறைவில் இந்தியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் வெளியேறியதுடன் இறுதிச் சுற்றுக்கான வாய்ப்பை இலங்கையும், பாகிஸ்தானும் பெற்றன

இலங்கை அணி தான் விளையாடிய லீக் போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு நுழைந்துள்ளதுடன், பாகிஸ்தான் மூன்று வெற்றி, ஒரு தோல்வியுடன் இறுதி போட்டியில் நுழைந்துள்ளது.

இரு அணிகளும் லீக் போட்டியில் ஒன்றையொன்று சந்தித்திருந்தன. இதில் இலங்கை அணி, பாகிஸ்தான் அணியை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார ஒரு சதம், 2 அரைச்சதம் உள்ளடங்கலாக 248 ஓட்டங்களை எடுத்தார், திரிமன்னே, அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் ஆகியோர் சிறந்த பதிவுகளை வெளிப்படுத் தியுள்ளனர். அத்துடன் பந்துவீச் சில் யோர்



க்கர் மன்னன் மலிங்கவுடன் மெண்டிஸ், சேனநாயக்கவும் சுழலில் அசத்துவர்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை அணித் தலைவர் மிஸ்பா, உமர் அக்மல், அப்ரிடி, ஹபீஸ், ஆகியோர் துடுப்பாட்டத்தில் வலுவாக உள்ளனர். இதில் அப்ரிடி, கடந்த சில போட்டிகளின் முடிவை தன்னுடைய அதிரடி மூலம் மாற்றி பாகிஸ்தான் அணியை வெற்றி பெற வைத்துள்ளார்.

அத்துடன் பந்துவீச்சில் உமர் குல், அஜ்மல், யுனைட் கான் போன்றவர்களும் சிறந்த நிலையில் உள்ளனர்.

இலங்கை அணி ஆசிய கிண்ணத்தை 4 தடவை கைப்பற்றியுள்ளதுடன், பாகிஸ்தான் அணி 2 தடவைகள் கைப்பற்றியுள்ளது.

ஆசிய கிண்ண தொடரில் பாகிஸ்தான் வீரர்களின் பதிவுகளை விட, இலங்கை வீரர்களின் பதிவுகளே உயர்வாக காணப்படுகின்றன.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் இதுவரை 12 தடவைகள் இறுதிப் போட்டியில் ஒன்றை ஒன்று சந்தித்துள்ளதுடன், இரு அணிகளும் தலா ஆறு முறை வென்றுள்ளன.

எது எப்படியிருப்பினும் இது வரலாறே தவிர, இன்று நடைபெற இருக்கும் ஆட்டத்தை தீர்மானிப்பவை அல்ல.

இரு அணிகளும் பலம் பொருந்தியவை என்பதால் இன்றைய இறுதிப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இரு அணிகளது விபரம் வருமாறு:

இலங்கை (சாத்தியமான)

குசல் பெரேரா, லகிரு திரிமன்னே, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, டினேஸ் சந்திமல், அஞ்சலோ மத்யூஸ் (தலைவர்), சத்துரன்க டி சில்வா, திஸார பெரேரா, சச்சித்திர சேனநாயக்க/ சுரங்க லக்மால், லசித் மலிங்க, அஜந்த மெண்டிஸ்.

பாகிஸ்தான் (சாத்தியமான)

அகமட் ஷெசாட், மொஹமட் ஹபீஸ், மிஸ்பா உல் ஹக் (தலைவர்), சொகைப் மகூட், பவாட் அலாம், உமர் அக்மல், சஹீட் அப்ரிடி, உமர் குல், சஜீட் அஜ்மல், மொஹமட் ராகா, யுனைட் கான். (கு)

# றொனால்டோ புதிய சாதனை

சர்வதேச நட்பு கால்பந்தாட்ட போட்டியில் கிறிஸ்டியானோ றொனால்டோவின் அசத்தலில், கமரூன் அணிக்கு எதிராக போர்ச்சுக்கல் அணி வெற்றி பெற்றது.

உலக கிண்ண கால்பந்து தொடர் (ஜூன் 12- ஜூலை 13) பிரேசிலில் நடக்கவுள்ளது, இதற்கு தயாராகும் விதமாக உலகின் பல்வேறு பகுதிகளில் சர்வதேச நட்பு கால் பந்து போட்டிகள் நடத்தப்படுகின்றன.

போர்ச்சுகலில் உள்ள லெய்ரியாவில் நடந்த போட்டியில் போர்ச்சுகல் அணி, கமரூன் அணியை எதிர் கொண்டது.

21-வது நிமிடம் போர்ச்சுகல்லுக்கு றொனால்டோ முதல் கோல் அடித்தார், கமரூன் அணியின் வின்செண்ட் 43-வது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார்.

இரண்டாவது பாதியில் போர்ச்சுகல் வீரர்கள் ரால் மெய்ரிலெஸ் (66), பேபியோ கான்டிரோ (67), எடினோ (76) ஆகியோர் கோல் மழை பொழிந்தனர்.

83-வது நிமிடம் கிறிஸ்டியானோ றொனால்டோ மற்றொரு கோல் அடித்ததால், போர்ச்சுகல் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2 கோல்கள் அடித்ததன் மூலம், சர்வதேச அரங்கில் போர்ச்சுகல் அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார் றொனால்டோ.

இவர் இதுவரை 110 போட்டியில் 49 கோல்கள் அடித்துள்ளார். இதற்கு முன் முன்னாள் வீரர் பாலெட்டா 88 போட்டியில் 47 கோல்கள் அடித்திருந்தார். (க)

# இலங்கையை விசாரிக்க...

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென தென்னாபிரிக்க பேராயரும், மனித உரிமை ஆர்வலருமான டெஸ்மன் டுட்டு ஆண்டகை கோரியிருந்தார்.

இந்த கோரிக்கையானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கான ஓர் விழிப்பு கோரிக்கை என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராயரின் அறிக்கையானது இலங்கையின் ஆர்வலர்கள், உலகம் முழுவதிலும் உள்ள 12க்கும் மேற்பட்ட நாடுகளின் குடிமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.நா உறுப்பு நாடுகள் விழித்துக்கொள்ள சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்ற போது இடம்பெற்ற அட்டூழியங்களை கண்டறிய நீதி மற்றும் பொறுப்புக் கூறும் சர்வதேச விசாரணை கட்டமைப்பை ஐக்கிய நாடுகள் ஏற்படுத்த வேண்டும் என பேராயர் தனது அறிக்கையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த 5 ஆண்டுகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் இறப்புகள் குறித்து விசாரணை நடத்துவதில் இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது.

தெளிவான ஆதாரங்கள் இருந்த போதிலும் சுதந்திரமான விசாரணைகளை நடத்தும் பொறுப்பை இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகிறது.

மனித உரிமை பேரவையில், இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க இதுவே ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு உரிய நேரமாகும் என பிராட் அடம்ஸ் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த தென்னாபிரிக்க முன்னாள் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, இலங்கை தொடர்பில் விசாரணையை நடத்த சர்வதேச விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் சார்பில் கோரிக்கை விடுத்திருந்தார்.

சிறுபான்மை இன குடிமக்களின் உரிமைகளுக்கு மரியாதை வழங்க ஒரு முறையான ஒழுங்குமுறை இல்லாததே இலங்கையில் எதிர் நோக்கப்படும் பாரிய பிரச்சினையாகும் எனவும் பேராயர் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை மோதலுக்கு பின்னரான செயற்பாடுகளை நேரம் எடுத்து செய்யும் போது அந்த விடயங்கள் சரியான பாதையில் செல்ல வேண்டும்.

போர் முடிவடைந்து சுமார் 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நிலைமைகள் மோசமடைந்துள்ளதே தவிர சிறந்ததாக மாறவில்லை எனவும் டெஸ்மண்ட் டுட்டு தெரிவித்திருந்தார். (செ-11)

## நவநீதம்பிள்ளை...

டன் போராடிய இராணுவத்தினரை அரசாங்கம் காட்டிக் கொடுக்காது.

சில இராணுவ வீரர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்நாட்டில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் அவர்கள் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக இராணுவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டு மக்களுக்காகவும் படையினருக்காகவும் எதனையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கடந்த 8 வருடங்களாக ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவின கூட்டங்களில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளின் தலைவராக கலந்து கொண்டு நாட்டுக்கு எதிராக மனித உரிமை குற்றச்சாட்டுக்களில் இருந்து நாட்டை பாதுகாத்துள்ளேன்.

சில நாடுகளின் தேவைகளின் அடிப்படையில் செயற்படுவதாகவும் இலங்கைக்கு நியாயமான வகையில செயற்படவில்லை எனவும் நான் நவநீதம்பிள்ளையிடம் கூறினேன். அத்துடன் நாங்கள் எமது நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளோம் எனவும் சமரசிங்க கூறியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஜெனிவாவுக்கு நேற்று சென்றதுடன் அங்குள்ள இலங்கை பிரதிநிதிகளுடன்இணைந்து இன்று மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் பங்கேற்க உள்ளார். (செ-11)

# இந்துக்களின் போர் நடைபெறமாட்டாது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையிலான இந்துக்களின் போர் துடுப்பாட்ட நிகழ்வு நடைபெறமாட்டாது. இது தொடர்பாக இரு கல்லூரிகளும் மாணவர்களுக்கு தெரியப்படுத்திய பின்னரும் வீதிகளில் நின்று நிகழ்வு தொடர்பான ஆரவாரங்களில் ஈடுபடுதலும், பணம் சேர்ப்பதும் கல்லூரியின் கௌரவத்தைப் பாதிப்படையச் செய்வதனால், கல்லூரி நிர்வாகம் இவ்வாறானவர்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கின்றது. இது தொடர்பாக பெற்றோர்கள், பொதுமக்கள் இவ்வாறான நடவடிக்கைகளின் போது விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளுமாறு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## உடன்படிக்கை...

யிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை சமூகத்தில் பெண்கள் முன்னணி பங்கை வகிக்கின்றனர். பெண்கள் நடவடிக்கைகளிலும் பல துறைகளிலும் முக்கிய பொறுப்புகளிலும் முக்கிய பதவிகளில் உள்ளனர்.

பெண்கள் தமது வீடுகளில் குடும்பத் தலைவர்களின் பாகுபாடு மற்றும் வன்முறைகளில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதேவேளை இலங்கையின் நீண்ட கால மோதல்கள் காரணமாக 89 ஆயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.

மோதல்களின் போது இடம் பெறும் பாலியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவது மற்றும் அது தொடர்பான சர்வதேச ரீதியில் பிரசாரங்களை மேற்கொள்ளும், ஐ.நா உடன்படிக்கையில் கையெழுத்திட இலங்கை அரசாங்கத்தை பிரித்தானியா ஊக்குவிக்கும் எனவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஜெயா, கருணாநிதி...

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு ஈழத்தை உருவாக்கி கொடுக்கும் முன்னர் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு உண்ணவும், குடிக்க கொடுத்து, அங்கு மின்சாரத்தை வழங்கி, வீடுகளை நிர்மாணித்து கொடுத்து, கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு நாங்கள் ஜெயலலிதாவுக்கு கூறவிரும்புகிறோம்.

தேவையானால் தமிழ்நாட்டை தனிநாடாக உருவாக்கி, இங்குள்ள தமிழர்களை அங்கு அழைத்துச் செல்லுங்கள். அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. தமிழ் நாடே தமிழ ஈழ வாதத்தின் கேந்திர நிலையம் என்பது எங்களுக்கு தெரியும்.

70 ஆம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் இருந்தே தமிழ் பிரிவினை வாத பயங்கரவாதிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டனர். இதனால் மூன்று தசாப்தகாலமாக பாதிப்புகளை அனுபவித்தோம். அத்துடன் பாரிய உயிர் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டன. நாட்டின் அபிவிருத்தி பின்நோக்கி சென்றது. பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்க 26 ஆயிரம் படையினர் உயிர்களை தியாகம் செய்ததுடன் 24 ஆயிரம் பேர் அங்கவீனமடைந்தனர்.

எமது நாட்டில் செய்த அழிவுகளுக்கு தமிழ்நாடு பொறுப்புக் கூறவேண்டும். சர்வதேச போர் குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமாயின் தமிழ் புலிப் பயங்கரவாதத்திற்கு அனுசரணை வழங்கி, பாதுகாப்பு வழங்கிய தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை கொண்டு செல்ல வேண்டும்.

ஜெயலலிதா, கருணாநிதி போனறவர்களை மின்சார நாற்காலியில் வைக்கக்கூடாது. 10 கசையடிகளை கொடுத்து தூக்கிலிட்டு கொலை செய்ய வேண்டும். இலங்கை மன்னர் காலத்துத் தண்டனையே இவர்களுக்கு பொருத்தமானது.

இலங்கையின் இறுதி மன்னரான தென்னிந்திய நாயக்கர் வம்சத்தை சேர்ந்த ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் மன்னன், ஹெலபொல அதிகாரத்தின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு வழங்கிய தண்டனையே ஜெயலலிதாவுக்கு வழங்க வேண்டும்.

எம்.ஜி. ராமச்சந்திரனுடன் தமிழ் படங்களில் நடனம் ஆடிவிட்டு இன்று அரசியலுக்கு வந்து எமது நாட்டை அச்சுறுத்துவதை கண்டு நாங்கள் அஞ்சவில்லை என்பதை ஜெயலலிதாவுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம் என நிஷாந்த ஸ்ரீ [illegible] தெரிவித்தார். (செ-11)

## நந்திக்கடலோரத்தில்...

அடையாளமும் காணப்படுவதனால் ஆயுததாரிகளே இக்கொலைகளினை புரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இவற்றோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் பெண்களின் உடைகள் என்பனவும் அங்கு பரவலாக காணப்படுகின்றன.

விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட முன்னரங்குகள் சிதைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

மன்னார், கிளிநொச்சி போன்ற இடங்களிலுள்ள மனிதப்புதைகுழிகள் வெளியுலகத்திற்கு தெரியவந்த நிலையில் நந்திக் கடலோரம் இன்னுமொரு மனித எலும்புக் கூடுகள் அடங்கிய பகுதி வெளிவராத சாட்சியமாக உள்ளதாக கணிக்கப்படுகிறது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க செனட்டின் ...

நிலையை எடுத்துக் காட்டுவதாக அந்த பிரேரணையில் சுட்டிக்காட்டிள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இந்த பிரேரணையானது மிகவும் சமநிலைப்படுத்தப்பட்டதும்- நீதியானதுமாகும். இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளை பிரதிபலிப்பதாக இப்பிரேரணை விளங்குகிறது.

ஐக்கிய அமெரிக்க செனட்டர்கள் இலங்கை சம்பந்தமாக மேற்கொண்ட இந்த சார்பு பிரேரணையானது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு மானசீக உந்துதலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியதும் மற்றும் அது மேற்கொண்டு வரும் பலதரப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் பிரேரணையில் சுட்டிக்காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது.

இந்த பிரேரணையானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்க - இலங்கை உறவை மேலும் இப்பிரேரணை வலுப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

இலங்கையை பற்றிய உண்மையான தகவல்களை தமது பிரதிநிதிகளுக்கு வழங்கியதற்கு அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களுக்கு நான் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அவர்களது விடாமுயற்சியின் பிரதிபலனாகவே செனட் பிரேரணை 364 அறிமுகம் செய்யப்பட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அரசியல் பிரதிநிதிகளுக்கு தொடர்ந்தும் தற்போதைய அபிவிருத்திகள் பற்றி விளக்கமளிக்கும் படியும் அவர்களை இலங்கைக்கு வந்து நேரடியாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை பார்வையிடும்படி கோரும் வண்ணம் அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களை அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## புத்தாண்டிற்கு...

யில் முதற்தடவையாக அதிகமான பரீட்சார்த்தி கள் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றினர். அதன் பிரகாரம் சுமார் 5 இலட்சத்து 78 ஆயிரத்து 140 மாணவர்கள் பரீட்சை எழுதியிருந்தனர்.

அவற்றில் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 56 - பேர் பாடசாலையினூடாக பரீட்சைக்கு தோற்றியிருந்த அதேவேளை, 1 இலட்சத்து 94 ஆயிரத்து 84 பேர் வெளிவாரியாக பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

அத்துடன், மேற்படி பரீட்சையானது 4312 நிலையங்களில் நடைபெற்றிருந்தது. இந்நிலையில் கடந்த வருடத்திற்கான க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் எதிர வரும் ஏப்ரல் மாதம் தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டிற்கு முன்பு வெளியிடப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## பிரேரணையின்...

றவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்திருந்தார்.

இதேவேளை அமெரிக்கப் பிரேரணை ஜெனிவாவில் விவாதத்துக்கு முன்வைக்கப்பட்ட பின்னரே இந்தியா தமது நிலைப்பாட்டை வெளியிடும் என்று இந்திய வெளியுறவு செயலாளர் சுஜாதா சிங் ஏற்கெனவே தெரிவித் திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)


**பதவி வெற்றிடம்**

யாழ்.நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

- தனிப்பட்ட செயலாளர் (ஆண்/பெண்)
- வயது எல்லை 50 வயதிற்கு கீழ்ப்பட்டோர்
- கல்வித் தகைமை: பட்டதாரிகளுக்கு முன்னுரிமை
- வேதனம்-ரூபா 25,000/=
- ஆங்கில மொழியில் தேர்ச்சி அவசியம்

(சி-6693)

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பயணம் செய்யக்கூடியவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்

**தொடர்பு:-0785285342**

**தேவை Wanted**

We need you உங்களுக்கு விருப்பமா? எங்களுடன் இணைந்து 40,000/= மேல் உழைக்க யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசத்தினர் விரும்பத்தக்கது.

we will train you. until you succeed vacancies

✦management Traince ✦Customer Service ✦Marketing ✦Administrator

தகைமை:-O/L, A/L வயது 18-30 ஆண், பெண் இருபாலாரும் தங்குமிட வசதி இலவசம்.



(5778)

அழைக்க: 0772712511, 0214993166

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 17.03.2014 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான வியாபார நிலையங்களுக்கான ஏலமும் வாகன தரிப்பிடங்களுக்கான ஏலமும் எதிர்வரும் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு :**

2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம், 2014 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபையின் தற்காலிக உரிமம் என்பன பெற்றிருத்தல் வேண்டும். ஏலத்தின் போது முழுப்பணமும் செலுத்தப்படல் வேண்டும்.

புளியம்பொக்கணை ஆலய பரிபாலன சபை (5739)

**மிக மலிவாக 23 இலட்சங்களுடன் கனடாவில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு**

இன்னும் சொற்ப தினங்களிற்கு மிகச் சிலருக்கு மட்டுமே இந்த சந்தர்ப்பம் அரிய வாய்ப்பை கைநழுவவிடாதீர்கள்


(யாவும் நிபந்தனைகளுடன்)

7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி பிறைவேற் லிமிற்

175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

021 2219016, 021 5689090



(C-6688)



**IELTS Special Class**

May - 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் Saturday & Sunday 8.30 a.m to 11.30 a.m திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி -5 மணி வரை நடைபெறும்

- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL" வகுப்புக்கள் - 10.03.2014 ஆரம்பம்

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

**BRITISH COLLEGE OF ENGLISH**

(C-6658) No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

**Little Aid**
CHARITY NR 1129695

**கிளிநொச்சியில் கணனிப் பயிற்சி நிலையம்**

4வது அணிக்குரிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையற்கலை வகுப்புக்கள் ஆரம்ப நிகழ்வும்

**09-03-2014** காலை 10.00

இடம் :
கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றம்

விசேட விருந்தினர்
**வணக்கத்துக்குரிய வண்டுரம்ப காசப்ப**
(அதுல டசான சர்வதேச பௌத்த கோவில்கள் தலைவர் - லண்டன்)

பிரதம விருந்தினர் :
**கௌரவ முருகேசு சந்திரகுமார் (பா.உ)**
(பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற பிரதிக்குழுக்களின் தவிசாளரும்)

சிறப்பு விருந்தினர்
**திருவாட்டி ரூபவதி கேதீஸ்வரன்**
(அரசாங்க அதிபர், கிளிநொச்சி)

கௌரவ விருந்தினர்கள்
**திரு. ஜோசப் விதானகே**
(இணைப்பாளர் - லிட்டில் ஏய்ட், இலங்கை)

Dr. **நிமால் காரியவசம்**
(தலைவர், மாற்றுவலுவுள்ளோருக்கான ஒலிம்பிக் -இலங்கை)

**கௌரவ வை. தவநாதன்**
(மாகாணசபை உறுப்பினர் - வட மாகாணம்)

**திரு. க. முருகவேல்**
(வலயக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி)

**திரு. க. நாகேஸ்வரன்**
(பிரதேச செயலாளர், கரைச்சி)

அன்புடன் அழைக்கின்றோம். (5779)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above > **Duration: 2 ½ Months**

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 08.03.2014 | 10.03.2014 | 15.03.2014 | 17.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-6689)

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org